

மேழிச்செல்வம்

பராபவ ௵ ஐப்பசி ௴ (அக்டோபர்-நவம்பர். 1966)

விலை 25பை

K.P.G.

படம் 1

படம் 2

படம் 3

படங்கள் விளக்கம் :
கட்டுரை ''கலப்புப் பண்ணைத் திட்டம்''
பக்கம் : 24

(முகப்புப் படம் : வாழை ஐந்தடி, குலை மூன்றடி, அதிசயமல்ல. உண்மை, அது மோரிஸ் வாழை).

5617-2
1.11.66.

மேழிச்செல்வம் சந்தாதாரர்களுக்கு

நினைவூட்டுகிறோம்

1966ஆம் ஆண்டு டிசம்பர்-ஜனவரி(மார்கழி) மாதம் இதமுடன் முடிவாகும் 'மேழிச்செல்வம்' சந்தாதாரர்களின் சந்தா எண் மாவட்டவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

மாவட்டம்	சந்தா எண் முதல்	வரையுள்ள
செங்கல்பட்டு ..	4272	4276
தென்ஆற்காடு ..	8513	8623
வடஆற்காடு ..	1797	1912
தஞ்சாவூர்	3158	3367
திருச்சி	8721	8753
சேலம்	407	506
மதுரை	5304	5313
கோயம்புத்தூர் ..	7823	8055
இராமநாதபுரம் ..	4365	4562
திருநெல்வேலி ..	1686	1789
கன்னியாகுமரி ..	2276	2349
நீலகிரி	Nil	Nil
உள்ளூர் சந்தா ..	2793	2821

"மேழிச்செல்வம்" தொடர்ந்து பெற மேற்படி சந்தாதாரர்கள் வருட சந்தா தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ம் தேதிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு மணியார்டர் மூலம் அனுப்பி புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்:—

விவசாய நெறியாளர்,
தபால் பெட்டி எண் 412,
சேப்பாக்கம், சென்னை-5.

புதுப்பிக்கும்போது தவறாமல் மாவட்டத்தையும் சந்தா எண்ணையும் அதில் குறிப்பிடவும்.

முன்பு தலைமை அலுவலகத்தில் சந்தா செலுத்தியவர்கள் சந்தா எண்ணுடன் உள்ளூர் சந்தா என்று குறிப்பிடவும்.

புதிதாக சந்தா செலுத்த விரும்புவோர் ஆண்டு சந்தா தொகை ரூ. 3 (மூன்று மட்டும்) அருகில் உள்ள விவசாய அலுவலகத்தில் அல்லது மணியார்டர் மூலம் மேற்குறிப்பிட்ட முகவரியில் செலுத்தி சந்தாதாரராகப் பதிவு செய்துக் கொள்ளலாம். சந்தா தொகை செலுத்தும்போது தங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.

ஆறு மாத சந்தா கிடையாது. தபால் தலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. சந்தாதாரர்கள் விலாசத்தில் மாறுதல் ஏற்பட்டால், மாவட்டம், சந்தா எண் முதலியவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு மேற்கண்ட முகவரிக்கு கடிதம் எழுதவும்.

உள்ளுரை

	பக்கம்
வாசனைத் திரவியங்கள் வரிசையிலே ..	5
ஆடிப் பட்டத்திற்கான காய் கறிகள் ..	7
அன்று சொன்னது இன்று உண்மையாயிற்று.	11
கமுகு (பாக்கு) நாற்றுகள் கிடைக்குமிடம்	11
அதிகப் பசுந்தழைக்கு கிளிரிசிடியா ..	12
தமிழ்நாட்டில் கலப்புரங்களின் புதிய விலைகள்.	13
சென்னை மாகாணத்தில் நெய் "அகமார்க்" தரம்பிரித்தல்.	14
திருநெல்வேலி மாவட்டத்தில் நெல் பயிருக்குப் பின் சணல்நார் (சணப்பு) சாகுபடி.	15
நம் உணவுப் பழககப் தானியமும் பருப்புவகைகளும்.	17
கேள்வியும் பதிலும்	18
வானொலிச் செய்திகள்	20
கலப்புப் பண்ணைத் திட்டம்—கால்நடை பாராமரிப்புத்துறை. ..	24
விவசாயத் திட்டங்கள்	25
1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திய காலநிலை அறிக்கை.	29
விளம்பரங்கள் :	
அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரசிங் ஒர்க்ஸ் விளம்பரம்.	4
N. நரசிம்மன், வாட்டர் டிவைனர் ..	27
ராஜா பண்ணைத் தோட்டம். ..	30

மேழிச்செல்வம்

வருடாந்தர சந்தா ..	ரூ. 3·00
தனிப் பிரதி ..	ரூ. 0·25
ஆண்டு மலர் ..	ரூ. 0·50

பயிர் பாதுகாப்பே அபார விளைச்சல்



மதிப்பு வாய்ந்த பயிர்கள், பயிர் நாச கிருமிகளாலும், பயிர் நோய்களினாலும் நாசமடைவது தேசீய நஷ்டமாகும்.

"ஆஸ்பி"

உபகரணங்கள் அதை நிச்சயமாகவும் திறமையாகவும் தடுக்க வல்லது.

மகுத் பேட்டரி ஸ்ப்ரேயர்



மகுத் சார்ஜ் பம்ப்



கேடார்-யுடிவிடி ராகிங் ஸ்ப்ரேயர் ஹைஜெட் டிரிக்கர் இயக்கத்தோடு கூடிய ஸ்ப்ரேகன்
(கேடார்-யுடிவிடி அசைத்தியக்கும் திரவ மருந்து பீச்சும் இயந்திரம்)



ஆஸ்பி ஹாண்ட் ரோடரி டஸ்டர்
(கையினால் சுழற்றும் பௌடர் மருந்து தூவும் இயந்திரம்)

அமெரிக்கன் ஸ்பிரிங் அண்டு பிரசிங் ஓர்க்ஸ் பிரைவேட் லிமிடெட்,

மாலாட் : : பம்பாய்-64

போன் : 692331 (5 லைன்கள்) தந்தி : "கில்லோகஸ்ட்" மாலாட் - பம்பாய்.

சென்னை, மைசூர் ராஜ்ய விநியோகஸ்தர்கள் :

எஸ். வி. ரங்கசாமி அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,
75, கலாசிபாளையம் நியூ எக்ஸ்டென்ஷன்.
தபால் பெட்டி எண். 539,
பெங்களூர்-2.

சென்னை காரியாலயம்
நெ. 20, ஒய். எம். சி. ஏ. கட்டிடம்,
வெஸ்ட்காட் ரோடு.
ராயப்பேட்டை, சென்னை-14.

மேழிச்செல்வம்

சுழன்று மேர்ப்பின்ன துலகம் அதனு
லுழந்தும் உழவே தலை.

மலர் 23	பராபவ௵ ஐப்பசி௴ 1966—அக்டோபர்-நவம்பர்	இதழ் 10

வாசனைத்திரவியங்கள் வரிசையிலே......

பண்டைக் காலத்திலிருந்தே வாசனைத் திரவியங்களுக்குப் பெயர் பெற்றது தமிழ்நாடு. நாட்டின் வளம் பெருக்கும் ஏற்றுமதிப் பொருள்கள் இவ்வாசனைத்திரவியங்கள். அவைகளுக்கு அன்று மட்டுமல்ல இன்றும் நல்ல மதிப்பும், விலையும் இருக்கின்றன. நீலகிரி, ஆனைமலை, கொடைக்கானல், கன்னியாகுமரி, திருநெல்வேலி மலைப்பகுதிகளில் பல வகையான வாசனைப் பயிர்களைப் பரப்ப நல்ல வாய்ப்பிருக்கிறது. அப்பகுதிகளில் நிலம் படைத்தோருக்கு உதவும் பொருட்டும் நம் நாட்டின் செல்வத்தைப் பெருக்கும் ஏற்றுமதிப் பண்டங்களின் சிறப்பை விளக்கவும் வாசனைத் திரவியங்கள் வரிசை மேழிச்செல்வத்தில் தொடங்கப்படுகின்றது. வரிசை அடுத்த இதழ்களிலும் தொடரும், படியுங்கள் பயன் அடையுங்கள்.

கட்டுரைகள் : தோட்டக்கலை நிபுணர், கோவை.

1. கிராம்பு

கிராம்பு மரத்தின் பூ மொட்டுக்களே கிராம்பாக விற்கப்படுகிறது. பண்டைய தமிழகத்தின் வணிகச் சிறப்பிற்குக் காரணமான வாசனைப் பொருட்களில் இதுவும் ஒன்றாகும். உணவுப் பண்டங்களுடனும் மருந்துப் பொருள்களுடனும் மற்றும் வாசனைப் பொருளாகவும் கிராம்பு உபயோகப்படுத்தப்படுகிறது. இந்தியாவில் சுமார் 200 ஏக்கருக்குக் குறைவான நிலப்பரப்பில்தான் இது பயிராகின்றது.

கிராம்பு மரங்கள் 30 அடி—40 அடி உயரம் வரை வளரக் கூடியது. பூ மொட்டுக்கள் இலைகளின் நுனியில் கொத்துக் கொத்தாகத் தோன்றும். இப் பூமொட்டுக்கள் மஞ்சள் நிறமாக மாறிய பின்பு விரிவதற்கு முன்பாகப் பறிக்கப்பட வேண்டும். பூ விரிந்து காய்க்காவிட்டால் கிராம்பு விதைகள்தான் கிடைக்கும்.

பயிராகும் இடங்கள்

இம்மரங்கள் ஈரப்பசையுள்ள தட்ப வெப்ப நிலைகளில் சுமார் 60 அங்குலம் மழையுள்ள இடங்களில் தரை மட்டத்திலிருந்து 2500 அடி உயரம் வரை வளருகின்றன. எல்லா விதமான மண்களிலும் இம்மரங்கள் வளர்ந்தாலும் வடிகால் வசதியுள்ள சத்து நிறைந்த செம்புறை மண்ணே சிறந்ததாகும். தமிழ்நாட்டில் முக்கியமாகப் பயிராகும் இடங்கள் நீலகிரி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களாகும். கேரளத்தில் கோட்டயம், கொல்லம் பிராந்தியங்களில் பயிராகிறது.

பருவம்

பொதுவாக ஜூன், ஜூலை மாதங்கள் கிராம்பு செடிகள் நடுவதற்குகந்த காலம். 20 அடி இடைவெளியில்

2 அடி நீள அகல, ஆழக்குழிகள் வெட்டி மக்கிய தழை உரங்களாலும், தொழு உரத்தாலும் மூட வேண்டும். நடுவதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே இக்குழிகள் வெட்டப்பட வேண்டும்.

இம்மரங்களின் இனப்பெருக்கம் பெரும்பாலும் விதைகளின் மூலமே செய்யப்படுகிறது. ஆனால் கிராம்பு கன்றுகளின் மீது கட்டப்படும் ஒட்டுக்கள் மூலமும் இது பயிராக்கப்படலாம் என்று பர்லியார் பழ ஆராய்ச்சி பண்ணையில் நடத்திய ஆராய்ச்சிகளின் மூலம் தெரிய வருகிறது.

கிராம்பு விதைகளே 'தாய்க்கிராம்பு' என்று சொல்லப்படுகிறது. விதைகளை 24 மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்துத் தோலை நீக்கலாம். இல்லையெனில் மணலுடனே அல்லது சாம்பலுடனே கலந்து நன்றாகத் தேய்த்து தோலுரிக்கலாம். தோலுரித்த விதைகளைத் தயார் செய்யப்பட்ட விதைப் பாத்திகளில் 4 முதல் 6 அங்குல இடைவெளி விட்டு விதைத்து தேவையான தண்ணீர் விட்டு வரவேண்டும். விதைப் பாத்திகளில் வெயில் படாமல் பந்தல் போட வேண்டும். விதைகள் 4 முதல் 5 வாரத்தில் முளைக்க ஆரம்பித்து ஓராண்டில் நடுவதற்குத் தயாராகின்றன. நாற்றுகள் வளரும் வரை நல்லபடி கண்காணிப்பது மிகவும் அவசியம்.

எருவும் எருவிடுதலும்

இம்மரங்களுக்கு ஒழுங்கான முறையில் உரமிடப்படுவதில்லை. ஆனால் மரங்கள் பலனுக்கு வருமுன்பு அவைகளுக்கு கம்போஸ்ட் அல்லது தொழு உரங்கள் இடப்படுகின்றன. தவிரவும் இலைச் சருகுகளை மரத்தின் அடியில் போட்டு மூடுவதும் சிறந்ததாகும்.

மகசூல்

செடிகள் நட்ட 7 முதல் 8 ஆண்டுகளில் பலனுக்கு வருகின்றன. சீரான வருவாயைக் கிராம்பு மரங்கள் கொடுப்பதில்லை. சில மரங்கள் மிகவும் அதிகமான வருவாயைக் கொடுக்கின்றன. அதே நேரத்தில் சில சரியான பலனளிப்பதில்லை. நீலகிரி மாவட்டத்தில் டிசம்பர்-ஜனவரி மாதங்களில் பூ மொட்டுகள் தோன்றுகின்றன. அவை முற்றி அறுவடைக்கு ஏப்ரல் மாதத்தில் தயாராகின்றன. மொட்டுகளை அறுத்து பாய்களில் பரப்பி காய வைக்கப்படுகின்றன. மரமொன்றிற்கு சராசரி 5 பவுண்டு கிராம்பு கிடைக்கும். ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 வருமானம் கிடைக்கும்.

கிராம்பின் பயன்

கிராம்பு நீண்ட காலமாகப் பலவிதங்களில் உபயோகப்படுத்தப்படுகிறது. உணவுப் பண்டங்கள் தயாரிப்பதில் வாசனைக்காக உபயோகிக்கின்றனர். வெற்றிலை பாக்குடன் சேர்த்து மென்று சுவைக்கின்றனர். இதனால் உண்ட உணவு ஜீரணமாவதோடு சிறிது உற்சாகமும் ஏற்படுகின்றது. மருந்துகள் உற்பத்தியில் இது பெரும்பங்கு பெறுகிறது. தவிரவும் உடலில் அமிலத்தன்மையைக் குறைக்க உபயோகிக்கப்படும் கார மருந்துப் பொருள்கள் உற்பத்தியிலும் கிராம்பை உபயோகிக்கின்றனர். கிராம்பு இலைகளிருந்தும் காய்ந்த குச்சிகளிலிருந்தும் வடிக்கும் எண்ணெய் சோப் மற்றும் வாசனைப் பொருள் உற்பத்திக்குப் பயன்படுகின்றன. கிராம்பு எண்ணெயிலிருந்து செயற்கை முறையில் 'வனலின்' என்ற வாசனைப் பொருள் தயாரிக்கப்படுகின்றது. மிட்டாய் உற்பத்தியிலும் கிராம்பு பொருள்கள் உபயோகமாகின்றன. பரிசோதனைச் சாலையில் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய பொருள்களைப் பிரித்துக் காண்பதற்கு கிராம்பு எண்ணெய் உபயோகமாகிறது.

கிராம்பு சாகுபடிக்கு வாய்ப்பு

இக்கிராம்பு பயிராவதற்கேற்ற நிலங்கள் தமிழ்நாட்டில் நீலகிரி மலையின் அடிவாரத்திலும், கன்னியாகுமரி, திருநெல்வேலி மாவட்டங்களிலும் நிறைந்துள்ளன. விவசாயிகள் இப்பயிர் சாகுபடியை அதிகரித்து பலனடையும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.



சி. சுந்தரராஜன், பி. எஸ்ஸி (எஜி), எம். எஸ்ஸி, உதவி காய்கறி நிபுணர், கோயம்புத்தூர்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு நாளைக்கு 3,000 கலோரி சக்தி தேவைப்படுகிறது. அதைப் பெற 10 கிலோ கிராம் கீரை வகைகள் வேண்டும். நமது தென்னிந்திய உணவில் தேவைக்கு அதிகமான தானியம் உள்ளதால் பல பற்றுக்குறை நோய்கள் ஏற்பட ஏதுவாகிறது. இக்குறையைச் சரிப்படுத்தவும் புரதம், வைட்டமின்கள், தாது உப்புகள் முதலியனவற்றைப் பெறுவதற்கும், பச்சைக் காய்கறிகளும், கிழங்குகளும், கீரைகளும் தேவை.

வைட்டமின் 'ஏ' என்ற 'கரோட்டின்' சத்து தக்காளி, புடல், காரட் போன்ற காய்கறிகளில் நிறைய இருக்கிறது. வைட்டமின் 'சி' என்ற "அஸ்கார்பிக் ஆஸிட்" முருங்கை, மிளகாய், கீரை வகைகள் மூலம் நிறையக் கிடைக்கிறது. தண்டுக்கீரை, வெந்தயக் கீரை முதலியவற்றில் கால்ஷியச் சத்து நிறைய இருக்கிறது. பாகற்காய், வெங்காயம், தக்காளி, போன்ற காய்கறிகளில் இரும்புச் சத்து நிறைய இருக்கிறது. வெண்டைக்காய், வெங்காயம் போன்ற காய்கறிகளில் 'அயோடின்' சத்து நிறைய இருக்கிறது. காய்கறிகள் நமது பசியைத் தீர்ப்பதுடன், மலச்சிக்கலையும் தடுக்கிறது.

மாமிசப் பதார்த்தங்களின் மூலம் நமக்கு வேண்டிய சத்துப் பொருள்கள் கிடைத்தாலும், வைட்டமின் "ஏ" வைட்டமின் "சி" போன்ற சத்துக்கள் காய்கறிகளில் நிறைய இருக்கின்றன. ஒவ்வொரு மனிதனுக்கும் நாள் தோறும் 114 கிராம் அளவு கீரை வகைகளும், 85 கிராம் கிழங்கு வகைகளும், 85 சிராம் மற்றக் காய்கறிகளும் தேவைப்படுகிறது. நம்மில் பலர் நமக்குத் தேவைப்பட்ட அளவு காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்வதில்லை. அதற்குப் பற்றுக்குறையே காரணம். இவற்றைப் போக்க வீடடிலும், தோட்டத்திலும் அதிக அளவில் காய்கறிகளைப் பயிரிட்டுப் பலன் அடைவதே சிறந்த வழி.

சமவெளிகளுக்கு ஏற்ற காய்கறிகள், கத்தரி, தக்காளி, மிளகாய், வெண்டை, முள்ளங்கி, வெங்காயம், புடல், பீர்க்கு, பாகல், பூசனி, பரங்கி, சுரைக்காய், வெள்ளரி, அவரை, கொத்தவரை, காராமணி, அரைக்கீரை, முளைக் கீரை, தண்டுக்கீரை, வெந்தயக் கீரை, பொன்னாங் கண்ணிக் கீரை, போன்ற கீரைவகைகள், புதினா, கொத்த மல்லி போன்ற வாசனைக் கீரைவகைகள் முதலியன. எளிதில் பயிரிடக்கூடிய அவற்றைச் சாகுபடி செய்யும் முறைகளை இங்கு கவனிப்போம்.

1. கத்தரி

சமவெளிகளில் பயிரிடப்படும் காய்கறிகளில் முக்கியமானது கத்தரி. இது ஒரு ஏக்கர் பயிரிட 120–180 கிராம் விதையை 1½–2 சென்டு நிலத்தில் நாற்று விடுங்கள். மேட்டு நாற்றங்கால் சிறந்தது. நடவு நிலத்தை நன்கு உழுத பின் ஏக்கருக்கு 20 டன் மக்கிய எரு அல்லது கம்போஸ்ட் உரம் இடவும். மேலும் 50 கிலோ அம்மோனியம் சல்பேட் 90 கிலோ சூப்பர் பாஸ்பேட், 45 கிலோ பொட்டாசியம் சல்பேட் ஆகிய மூன்றையும் கடைசி உழ்வில் போட்டு நன்றாக மண்ணுடன் கலக்கவும் நாற்று நட 75 செ.மீ. இடைவெளியில் பார் பிடியுங்கள்; நாற்றுகளுக்கு முப்பது நாட்கள் ஆனதும் பிடுங்கி நடுங்கள் 60 செ. மீட்டர் தூரத்திற்கு ஒன்றாக நாற்றுகளை நடுங்கள். நாற்று நட்ட ஒரு மாதத்திற்கு பிறகு மேலும் 50 கிலோ அம்மோனியம் சல்பேட் நிலத்திற்குப் போட்டு செடிகளுக்கு மண் அணைத்து தண்ணீர் பாய்ச்சவும்.

மூன்றாவது மாதத்தில் இருந்து காய்கள் அறுவடைக்கு வரும். வாரத்திற்கு இருமுறை அறுவடை செய்யவும்.

கத்தரியின் வயது 6 மாத காலமாகும்.

ஏக்கருக்குச் சுமார் 2,500—5,000 கிலோ காய்கள் கிடைக்கும்.

கத்தரியில் உயர்ந்த வகைகளான குடியாத்தம் (வரிக் காய்) கொத்து வெள்ளை, நீள ஊதா ஆகியவற்றைப் பயிர் செய்யத் தேர்ந்தெடுங்கள்.

2. தக்காளி

கடல் மட்டத்திலிருந்து 7,000 அடி வரை பலவித தட்ப வெப்ப நிலைகளில் தக்காளி பயிரிடலாம்.

ஏக்கர் ஒன்றுக்கு 90—120 கிராம் விதை வீதம் 1½—2 செண்டு நிலத்தில் நாற்று விடவேண்டும். நடவு நிலத்தை நன்றாக உழவேண்டும். கடைசி உழவுக்குமுன் ஏக்கருக்கு 20 டன் மக்கிய மாட்டு எரு அல்லது கம்போஸ்ட் உரம் போடவேண்டும். மேலும் 50 கிலோ அம்மோனியம் சல்பேட், 100 கிலோ சூப்பர் பாஸ்பேட், 50 கிலோ பொட்டாஷியம் சல்பேட் உரமிட்டு மண்ணால் மூடவும்.

சுமார் 25 நாட்களில் பிடுங்கி நடவேண்டும். 75 செ. மீ இடைவெளியில் பார் பிடித்து 60 செ. மீ. தூரத்தில் நாற்றுகளை நடவும்.

நாற்று நட்ட ஒரு மாதம் கழித்து களை எடுத்து ஏக்கருக்கு 50 கிலோ அமோனியம் சல்பேட் போட்டு மண் அணைக்கவேண்டும்.

பின்னர் செடிகளை மூங்கில் கிளைகளுடன் இணைக்கவும். நடுத்தண்டு சுமார் 90 செ. மீ. உயரம் வளர்ந்ததும் நுனியைக் கிள்ளி விடுங்கள். இதனால் செடிகள் கிளைவிட்டு நன்றாக வளரும்.

3 அல்லது 4 பக்கக் கிளைகளுக்கு மேற்பட்ட கிளைகளைக் கிள்ளி விடுங்கள். இதனால் காய்கள் அதிகம் பிடிக்க வாய்ப்புண்டு.

செடி அதிக தழையுடன் காணப்பட்டால் இலைகளைக் கிள்ளி விடவேண்டும்.

காய்கள் பெரிதாய் கிடைக்க பூக்கொத்துகளிலுள்ள சில பூக்களைக் கிள்ளி விடலாம்.

சாதாரணமாக ஒரு செடி சுமார் 40 காய்கள் தரும்.

செடியின் வயது 4—5 மாதமாகும். 3½ மாதத்திலிருந்து காய் அறுவடை செய்யலாம்.

ஒரு ஏக்கரிலிருந்து 4,500 கிலோ கிராம் முதல் 5,500 கிலோ கிராம் வரை மகசூல் கிடைக்கும்.

உயர்ரக தக்காளி வகைகள் ''பெஸ்ட் ஆப் ஆல்'' 'போனி பெஸ்ட்'', ''மார்குளோப்'' ''பாண்டிரோஸர்'', '' ஆக்ஸ்ஹார்ட் '' '' கோல்டன் குயின்'' ''சூ'' ''மீருட்டி'' '' கல்யான்பூர் '' '' மெம்மாரா '' ஆகியவையாகும் லாபகரமான சாகுபடிக்கு உயர் ரக விதைகளைத் தேர்ந்தெடுங்கள்.

3. வெண்டை.

வெண்டை எல்லா இடங்களிலும் வளரும். நிலத்தை நன்கு உழவேண்டும். கடைசி உழவின்போது ஏக்கருக்கு 20 டன் மக்கிய மாட்டெரு அல்லது கம்போஸ்டும் 20 கிலோ அமோனியம் சல்பேட், 90 கிலோ சூப்பர் பாஸ்பேட் 45 கிலோ பொட்டாசியம் சல்பேட் ஆகிய உரங்களையும் போட்டு மூடவேண்டும்.

அறுபது செண்டி மீட்டர் இடைவெளி விட்டு பார் அமைக்கவும். பார்களின் ஒரு பக்கத்தில் 30 செ. மீட்டர் இடைவெளியில் 2 விதைகள் வீதம் ஊன்ற வேண்டும். நீர் பாய்ச்ச வேண்டும். ஏக்கருக்கு 3 கிலோ விதை தேவைப்படும்.

பிறகு களை எடுத்து 25 கிலோ அம்மோனியம் சல்பேட் போட்டு மண் அணைக்க வேண்டும்.

உடனே நீர்பாய்ச்சவும்.

நட்ட 8 வாரத்திலிருந்து காய்கள் அறுவடை செய்யலாம். ஒவ்வொரு செடியிலும் இருந்து 25 முதல் 30 காய்கள் வரை கிடைக்கும்.

மூன்று நாட்களுக்கு ஒரு முறை காய்கள் அறுவடை செய்யவும்.

செடியின் வயது 3 முதல் 4 மாதங்கள். ஒரு ஏக்கரிலிருந்து 2,000 முதல் 3,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

உயர்ந்த ரக வெண்டை ரகங்கள் பூசா சவானி, சிவப்பு வெண்டை முதலியன.

4. மிளகாய்.

மிளகாய் காரம் உள்ளது காரம் இல்லாதது என இரண்டு வகைகள் உண்டு. காரம் இல்லாத வகைகள் மலைப்பிரதேசங்களிலும் காரம் உள்ள வகை சமவெளிகளிலும் பயிராகின்றன.

120 கிராம் விதையை 2 செண்டு நாற்றங்காலில் விட்டு ஒரு ஏக்கரில் நடவும். 60 செ. மீட்டர் இடைவெளியுள்ள பார்கள் பிடிக்கவேண்டும். பார்களின் பக்கவாட்டில் நாற்றுகளை 60 செ. மீட்டர் இடைவெளியில் நடவும். நாற்றுகள் 30 நாட்களானதும் நடலாம். உரம் இடுதல், மண் அணைத்தல், களை எடுத்தல், நீர்பாய்ச்சுதல் யாவும் கத்தரி, தக்காளியைப் போன்றது. காய்களைச் செடிகள் நட்ட 2 மாதத்தில் பறிக்கலாம். மூன்று மாதங்கள் வளர விட்டால் பழுத்து பழங்களாகும். செடியின் வயது 8 மாதம்

ஒரு எக்கரிலிருந்து 1,400 கிலோ முதல் 2,200 கிலோ வரை மகசூல் கிடைக்கும்.

5. நாட்டு அவரை

நமது மாகாணத்தில் எல்லா இடங்களிலும் பயிரிடப் படுகிறது. 300 சென்டி மீட்டர் இடைவெளி விட்டுக் குழிகளை வெட்டி எருவும் மண்ணும் கலந்து நிரப்பவும். ஒவ்வொரு குழியிலும் 5—6 விதைகளை விதைக்கவும். ஒரு எக்கர் பயிர் செய்ய 2 முதல் 3 கிலோ வரை விதை தேவைப்படும். விதை விதைத்து ஒரு மாதத் திற்குப் பிறகு ஒரு கூடை (10 கிலோ) வீதம் மக்கிய மாட்டு எரு ஒவ்வொரு குழிக்கும் இடவேண்டும். கொடி படர பந்தல்கள் அமைக்கவும். நட்ட 6 மாதங் களில் காய்கள் காய்க்கும். வயது 6 முதல் 8 மாதம். ஒவ்வொரு செடியிலிருந்தும் 4 முதல் 5 கிலோ கிராம் காய்கள் அறுவடை செய்யலாம். ஒரு எக்கரிலிருந்து சுமார் 4,500 கிலோ கிராம் மகசூல் கிடைக்கும்.

6. காராமணி

பிஞ்சுக் காய்களும் முற்றிய விதைகளும் கறி சமைக்க உதவுகிறது. ஒரு எக்கருக்குச் சுமார் 14 கிலோ கிராம் விதை தேவை. 60 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு செடிக்குச் செடி 20 சென்டி மீட்டர் இடைவெளியில் விதைகளை ஊன்றவும். விதை போட்ட 4 மாதங்களி லிருந்து அறுவடை செய்யலாம். வயது 4 முதல் 6 மாதமாகும். ஒரு எக்கரில் 900 கிலோ கிராம் மகசூல் கிடைக்கும். உயர்ந்த ரகங்கள் இ. சி. 455. சி. 419, பூசா 419 முதலியனவாகும்.

7. கொத்தவரை

எழுபத்தைந்து சென்டி மீட்டர் இடைவெளியில் பார் பிடித்து செடிக்குச் செடி 75 சென்டி மீட்டர் இடைவெளி விட்டு விதைகளை ஊன்ற வேண்டும். ஒரு எக்கருக்கு 4 கிலோ கிராம் விதை தேவை. ஒரு எக்கரிலிருந்து 2,000 கிலோ கிராம் மகசூல் கிடைக்கும். உயர்ந்த ரகங்கள் சி. பி. 78 (சிறுகாய்) சி. பி. 38 (நீண்ட காய்) பூசா மௌஸ்மி முதலியன.

8. புடல்

நிலத்தை நன்றுகப் பண்படுத்தி 200 சென்டி மீட்டர் இடைவெளியில் குழிகள் வெட்டவும். ஒவ்வொரு குழிக்கும் 2 கூடை (25 கி. கி.) நல்ல மக்கின உரம் இடவும். ஒவ்வொரு குழியிலும் ஐந்து விதைகள் வீதம் ஊன்றவும். ஒரு எக்கருக்கு சுமார் 750 கிராம் விதை வேண்டும். செடி வளர ஆரம்பித்ததும் பந்தல் போடவும். நட்ட மூன்றுவது மாதத்திலிருந்து காய்கள் அறுவடை செய்யலாம். செடியின் வயது சுமார் ஐந்து மாதங்கள். காய்கள் நேராக வளர பிஞ்சு காய்களின் நுனியில் ஒரு சிறிய கல் கட்டித் தொங்க விடவும். ஒவ்வொரு செடியிலிருந்தும் சுமார் 10 காய்கள் கிடைக்கும். ஒரு எக்கரிலிருந்து சுமார் 2,800 — 3,600 கிலோ மகசூல் கிடைக்கும். உயர் ரகங்கள் நீண்ட புடல், குட்டைப் புடல் முதலியன.

9. பாகல்.

நன்றுகப் பண்படுத்திய நிலத்தில் 180 சென்டி மீட்டர் இடைவெளியில் குழிகள் வெட்டவும். ஒவ்வொரு குழியிலும் 5 — 6 விதைகள் நடவும். நடுமுன் குழிக்கு 25 கிலோ மக்கின உரம் போடவும். மூன்றுவது மாதம் முதல் காய்க்க ஆரம்பிக்கும். கொடி படர நான்கு அடி உயரத்தில் பந்தல் போடவும். ஒவ்வொரு செடியி லிருந்தும் சுமார் 1½ கிலோ காய்கள் கிடைக்கும் செடியின் வயது சுமார் நான்கு மாதங்கள். ஒரு எக்கரி லிருந்து 3,600 கிலோ மகசூல் கிடைக்கும். வெள்ளை, பச்சை, சிறுபாகல் என மூன்று வகைகள் உண்டு.

10. பீர்க்கு.

பயிர் செய்யும் முறை பாகலைப் போன்றது. ஒரு எக்கருக்கு ஒரு கிலோ கிராம் விதை வேண்டும். செடியின் வயது 4½ மாதங்கள். முற்றாத காய்களை அறுவடை செய்யவும். ஒரு செடியில் சுமார் 25 காய்கள் கிடைக்கும். ஒரு எக்கரில் சுமார் 3,600 கிலோ காய்கள் கிடைக்கும். நீண்ட பீர்க்கு வகை சிறந்தது ; 5,400 கிலோ மகசூல் கிடைக்கும்.

11. சுரைக்காய்.

180 சென்டி மீட்டர் இடைவெளியில் குழிகள் வெட்டி எருவையும் மண்ணையும் கலந்து மூடவும். குழிக்கு நான்கு விதைகள் வீதம் ஊன்றவும். எக்கருக்கு 750 கிராம் விதை வேண்டும். கொடியைப் பந்தல் அல்லது வீட்டுக் கூரையின்மீது படர விடவும். கொடிக்கு 5 — 10 காய்கள் வரை கிடைக்கும்.

12. பறங்கிக்காய்.

குழிக்கு 5—6 விதைகளை நடவும். 300 சென்டி மீட்டர் இடைவெளியில் குழிகள் வெட்டி மண்ணும் மக்கிய எருவும் கலந்து நிரப்பவும். ஒரு எக்கருக்கு 500 கிராம் விதை தேவைப்படுகிறது. செடியின் வயது 6—8 மாதம். 4½ மாதத்திற்குப் பிறகு பயிர் அறுவடை செய்யலாம். கொடிக்கு 5 — 6 காய்கள் அறுவடை செய்யலாம். ஒரு எக்கருக்குச் சுமார் 2,000 — 2,500 காய்கள் கிடைக்கும்.

13. பூசணி

பறங்கியைப் பயிர் செய்வது போல் பயிரிடவும். 500 கிராம் விதை ஒரு ஏக்கருக்குத் தேவைப்படுகிறது. 4½ மாதத்திற்குப் பிறகு பயிர் அறுவடைக்குத் தயாராகிறது. செடியின் வயது சுமார் 8 மாதங்கள். ஒரு செடியில் 5 — 6 காய்கள் அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரில் 2,000 காய்கள் வரை கிடைக்கும்.

14. முள்ளங்கி

இதை எல்லா காலங்களிலும் எல்லா வகையான நிலங்களிலும் பயிர் செய்யலாம். ஒரு ஏக்கருக்கு இரண்டு கிலோ விதை வேண்டும். 45 சென்டி மீட்டர் இடைவெளியில் பார் பிடித்து 20 சென்டி மீட்டர் இடைவெளியில் விதைகளை ஊன்றவும். உரம் இடுதல், மற்ற பின் செய் நேர்த்திகள் கத்தரியைப் போன்றது. செடியின் வயது சுமார் 70 நாட்கள். நாற்பத்தைந்து நாட்களிலிருந்து அறுவடை செய்யலாம். ஏக்கருக்கு 6,750 கிலோ மகசூல் கிடைக்கும். எச். 113 என்ற வெள்ளை ரக முள்ளங்கி சிறந்தது.

15. தண்டுக்கீரை

விதைகள் சிறியதாக இருப்பதால் ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ விதையை 10 கிலோ மணலுடன் கலந்து பாத்திகளில் பரவலாக விதைக்கவும். 150 சென்டி மீட்டர் கொண்ட சதுர பாத்திகள் சிறந்தவை. விதைகளைப் பூச்சிகள் கொண்டுபோகாமல் இருக்க டி. டி. டீ. ஐந்து சதத் தூளுடன் கலந்து விதைகளை விதைக்கவும். விதைகள் முளைத்த பின் 15 சென்டி மீட்டர் இடைவெளிக்கு ஒன்றாக தண்டுக்கீரையை வளரவிடவும். ஒரு ஏக்கருக்கு 10 டன் மக்கிய எரு போடவும். 150 சென்டி மீட்டர் சதுர பாத்திக்கு இரண்டு பெரிய கூடை மாட்டு எரு, அரை கிலோ சூப்பர், அரை கிலோ பொட்டாசியம் சல்பேட் வீதம் கடைசி உழவின்போது போடவும். 30 நாளிலிருந்து கீரையை அறுவடை செய்யலாம். வயது சுமார் 60 — 90 நாட்கள். சிவப்பு, வெள்ளை நிற ரகங்கள் இருக்கின்றன. ஏ. 21 (பொள்ளாச்சி) ஏ-33 (கோவில்பட்டி) போன்ற ரகங்கள் சிறந்தவை.

16. அரைக்கீரை

தண்டுக்கீரையில் கூறியுள்ளது போல் பயிர் செய்யவும். ஆனால் பயிரை நிலத்தில் ஆறு மாதம் வரை விட்டு வைக்கலாம். வேண்டும்போது கீரையை அறுவடை செய்யலாம்.

17. கோகு அல்லது புளிச்சக்கீரை

இது பயிரிடும் முறை வெண்டையைப் போலவே. ஏக்கருக்கு இரண்டு கிலோ விதை வேண்டும். 60 சென்டி மீட்டர் இடைவெளியில் பார் பிடித்து 60 சென்டி மீட்டர் செடிக்குச் செடி தூரம் விட்டு விதைகளை ஊன்ற வேண்டும். முக்கியமாகக் கீரைக்காகப் பயிரிட்டாலும் கூட, இதன் நார் பலவித பொருள்கள் செய்ய உபயோகப் படுகிறது. இளம் இலைகள், இளம் பூ, மொட்டுகள், கீரையைப்போல கறி சமைக்க உதவுகிறது. சட்னியும் செய்யலாம். இதன் வயது மூன்று மாதங்கள்.

18. கொத்தமல்லி

கீரைக்காகவும், கொத்தமல்லிக்காகவும் பயிரிடப் படுகிறது. தனிப் பயிராகவும், வெங்காயம் போன்றவையோடு கலப்புப் பயிராகவும் பயிரிடலாம். ஏக்கருக்கு 5—6 கிலோ விதை வேண்டும். 45 நாட்களில் தழையாக எடுக்கலாம். கொத்தமல்லி 90 நாட்களில் கிடைக்கும். ஒரு ஏக்கரிலிருந்து சுமார் 1,500 கிலோ தழை கிடைக்கும். மேலும் சுமார் 2,000 கிலோ கொத்தமல்லி கிடைக்கிறது.

19. புதினா

வேர்த்துண்டுகளை நட்டுப் பயிர் செய்யவும். மரத்தின் அடியில் செழித்து வளராது. ஆனாலும், சிறிது நிழலோடு கூடிய இடம் சிறந்தது. நட்ட 45 நாட்களில் இலைகளைப் பறிக்கலாம். இது வருடம் பூராவும் கிடைக்கக்கூடிய ஒரு வாசனை இலை.

20. வெங்காயம்

பெல்லாரி வெங்காயம் என்பது பெரிய வெங்காய வகையைச் சேர்ந்தது. இரண்டு கிலோ விதையை ஐந்து சென்ட் நிலத்தில் நாற்று விட்டு, ஒரு ஏக்கரில் நடவும். பார்களிலோ பாத்திகளிலோ 15 சென்டி மீட்டர் செடிக்குச் செடி இடைவெளி விட்டு வரிசையாக நடவும். நட்ட ஐந்து மாதத்தில் அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கரில் சுமார் 6,000 கிலோ மகசூல் கிடைக்கும்.

நாட்டு வெங்காயம் சிறிய வெங்காய வகையைச் சேர்ந்தது. சுமார் 800 கிலோ சிறிய வெங்காயத்தை நடுவதன் மூலம் ஒரு ஏக்கரிலிருந்து 5,000 கிலோ மகசூல் பெறலாம்.

மேற்கூறிய பிரகாரம் நமக்குத் தேவையான காய்கறிகளை நாமே உற்பத்தி செய்து கொள்ளவேண்டும். “பருவத்தே பயிர் செய்” என்ற முதுமொழிக்கு இணங்க, காய்கறிகளைப் பயிரிட்டு நமக்கு நாமே உதவிக் கொள்வது அல்லாமல் நாட்டுக்கும் உதவுவோம்.

காய்கறிகளை இன்னும் அதிகமாகப் பயிரிடுங்கள்.

அன்று சொன்னது இன்று உண்மையாயிற்று

[ஓர் சிறு நிகழ்ச்சி]

எம். கே. லிங்கியா, பி.எஸ்ஸி. (விவசாயம்.)

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு நீலகிரி மாவட்டத்தில் ஒரு சிறு கிராமத்தில் மலைஜாதி விவசாயி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவரிடம் நிறைய பணமிருந்தது. எல்லாம் வெள்ளி ரூபாயாகவே கையிருப்பில் வைத்திருந்தார்.

இவர் செல்வத்தைப் பற்றி எல்லா கிராமங்களுக்கும் தெரிந்திருந்தது. இச்செல்வந்தர் எப்பேர்ப்பட்டவர் என்பதை நேரில் கண்டறிய ஆவலுற்று, தூர கிரமமொன்றிலிருந்து இரு விவசாயிகள் அக்கிராமத்திற்குச் சென்றனர்.

அவர்கள் அச்செல்வந்தரின் வீட்டுத திண்ணையில் அமர்நதிருந்தனர். அச்சமயம் சற்று முன்பு பெய்த பலமான மழையால், வீட்டிற்கு முன்னுள்ள களத்தில் காய்ந்து கொண்டிருந்த தானியத்தில (கோதுமை, காஞ்சி முதலியன) கொஞ்சம் மழை தண்ணீரால் அடித்துக் கொண்டு போகப்பட்டிருந்தது. அச்செலவந்தர் சாதாரண உடையில் அத்தானியங்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தார்.

செல்வந்தரைக் காணச் சென்றிருந்த விவசாயிகள், தானியத்தைப் பொறுக்கிக் கொண்டிருந்தவர்தான் அச் செல்வந்தர் என்று தெரிய வந்து, தஙகளுக்குள் "அவன் ஒரு லோபி" என்றும், தமக்கு என்ன உதவி செய்யப் போகிறுன் என்றும் சநதேகத்துடன் தங்களுக்குள் பேசிககொண்டிருநதனர்.

அதை அச்செல்வந்தர் கேட்டுக்கொண்டார். சிறிது நேரத்திற்கு பிறகு தானியம் முழுவதையும் சேகரித்துக் கொண்டு வீட்டிற்குள் சென்ருர். வந்த விருந்தினரை அன்போடு உபசரித்து, கை கால் சுத்தம் செய்து கொண்டு உணவருந்த வரும்படி அழைத்தார். அவர்களும் அவ்வாறே அமாநதனர்.

இருவருக்கும் இரு வட்டில்கள் வைத்து விட்டு, உள்ளே சென்ருர். ஒரு குளகம் (2¼ பக்கா படிச்குச் சமம்) நிறைய வெள்ளி ரூபாயகளைக் கொண்டு வந்து இரு வட்டில்களிலும் கொட்டினுர். விருந்தாளிகள் வியநதனர்!

பிறகு அவர்கள் எதிரே அமர்ந்து கொண்டு விருநதாளிகளைச் சாப்பிடும்படிச் சொன்னுர். விருந்தாளிகள் தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்ததை அச் செல்வந்தர் எப்படியோ தெரிந்து கொண்டார் என அறிந்து, விருந்தினர் அவரை மன்னிக்கும்படி கோரினா.

மகிழ்ச்சியடைந்த செல்வந்தர் 'உணவு தானியங்கள் தான் முதன்மையானது; எவ்வளவு பணமிருந்தும் பயன்படாது' என்பதை அவர்களுக்கு உணர்த்தி, பிறகு வட்டில்களில் உணவு படைத்து அவர்களை திருப்தியாய் சாப்பிடவைத்து, ஆளுக்குக் கொஞ்சம் பணமும் கொடுத்தனுப்பினுர்.

அப்பெரியவர் அன்று காட்டியதை இன்று உணர்கிருேம். எவ்வளவு பணமிருந்தாலும் உணவு தானியம் கிடைக்காமல் திண்டாடுகிருேம். உணவு தானியமே முக்கியமென்று உணர்ந்து உணவு பெருக்கத்திற்கு விவசாயப் பெருமக்கள் முழு மூச்சுடன் முயற்சிப்பார்கள் என்று நம்புகிறேன்.

கமுகு (பாக்கு) நாற்றுகள் கிடைக்குமிடம்.

கீழே கொடுத்துள்ள அலுவலகங்களுக்குச் சேர்ந்த கமுகு நாற்றங்கால்களிலிருந்து கமுகு நாற்றுகள் கிடைக்கின்றன. விலை ஒரு நாற்று 13 பைசா. வேண்டுவோர் நேரடியாக நாற்றங்கால்களிலிருந்தே பெறலாம்.

வட்டார வளர்ச்சி அலுவலங்களில் உள்ள விவசாய அலுவலர்கள் விவசாயிகள் வேண்டும் நாற்றுகளை மொத்தமாக வாங்கி விநியோகம் செய்யலாம்.

நாற்றங்கால் உள்ள அலுவலகம்

1. உதவித் தோட்டக்கலை நிபுணர்
   பழ ஆராய்ச்சிப் பண்ணை,
   கன்னியாகுமாரி
2. விவசாய விஸ்தரிப்பு அலுவலர்,
   கூடலூர், நீலகிரி.
3. ஆராய்ச்சி உதவியாளர்,
   கல்லார் பர்லியார் பழப்பண்ணை,
   மேட்டுப்பாளையம், கோயம்புத்தூர்.
4. தோட்டக்கலை உதவியாளர்,
   மாதிரி பழப்பண்ணை—நாற்றங்கால்
   பெரியகுளம், மதுரை.
5. தோட்டக்கலை உதவியாளர்,
   மாதிரி பழப்பண்ணை—நாற்றங்கால்
   குற்றுலம், திருநெல்வேலி ஜில்லா.

மாவட்டங்களிலுள்ள விவசாயப் பணியாளர்கள் இதற்கு விளம்பரம் கொடுத்து விவசாயிகளுக்கு உதவலாம்.

அறிவிப்பவர் :

உதவித் தோட்டக்கலை நிபுணர்,
கமுகு பெருக்கத் திட்டம், கோயமுத்தூர்.

அதிகப் பசுந் தழைக்கு கிளைரிசிடியா

எச். எஸ். வேலாயுதம், பி.எஸ்ஸி. (விவ.) வானொலி உதவியாளர், சென்னை.

நீர் வளத்தில் பயிராகும் நெற் பயிருக்கு தழை உரமிடுதல் நம் விவசாயிகளின் தொன்று தொட்ட பழக்கம் ஆகும். தழை உரம் நிலத்தின் வளத்தையும், தரத்தையும் உயர்த்துகிறது என்பது யாவரும் அறிந்ததே. ஆனல் தழை உரம் கிடைக்கவில்லையே என்ற கூக்குரலைத்தான் நாம் கேட்க முடிகின்றது. தழை உர உற்பத்தியைப் பெருக்க கிளைரிசிடியா, ஆடாதோடை, இன்டிகோபராடாஸ்மேணியா, மலைப்பூவரசு போன்ற செடிகளை வைத்துப் பயிராக்க விவசாய இலாகா வலியுறுத்துகின்றது.

கிளைரிசிடியா செடியானது வெளிநாட்டிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டதாகும். இது துரிதமாக 20-25 அடி உயரம்வரை வளரக்கூடியது. வெட்ட வெட்ட கிளைத்துக் கொண்டே இருப்பதால் பல தடவை தழையை வெட்டி சேகரித்துக் கொள்ளலாம். ஆடுதுறை, திரூர் குப்பம் போன்ற அரசினர் விவசாயப் பண்ணைகளைப் பார்வையிட்ட ஒவ்வொருவரும் எங்கு பார்த்தாலும் கிளைரிசிடியா பசுமை பொங்கச் செழித்து வளர்ந்திருப்பதை பார்த்திருக்கலாம்.

ஏன் கிளைரிசிடியா நடவேண்டும் ?

கிளைரிசிடியா வெகு சுலபமாக வளர்வது, அதிக தழை கொடுப்பது, தழையில் சத்து அதிகமுள்ளது, வெகு சீக்கிரம் மண்ணில் மக்கக் கூடியது, ஆக பல நன்மைகளைக் கொண்டது. விளைநிலம் அனைத்திலும் உற்பத்தியைப் பெருக்குவது விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவருடைய கடமையாகும். ஆகவே எல்லோரும் தழையுரப் பெருக்கத்திற்காக கிளைரிசிடியா செடிகளை நடவேண்டும். நமது லட்சியம் ஒவ்வொரு ஏக்கர் வரப்பிலும் 100 கிளைரிசிடியா மரங்கள் உற்பத்தி செய்தல். செடிக்கு சராசரி 50 ராத்தல் தழை கிடைக்கிறது. ஆகவே ஒரு ஏக்கருக்குத் தேவையான அளவு தழை உரம் (5000 ராத்தல்) கிடைக்க 100 செடிகள் இருந்தால போதுமானது.

நடவுக்கான கன்றுகள் தயாரிப்பு.

சென்னை விவசாய இலாகாவினர் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வரும் பிரசாரத்தின் பலனாக தற்போது நமது மாநிலத்தில் பல இடங்களில் காய்க்கும் கிளைரிசிடியா மரங்கள் இருக்கின்றன. இந்த மரங்களிலிருந்து விதை சேகரம் செய்தால் கிலோ ஒன்றுக்கு ரூ. 4–முதல் ரூ. 6–வரை கிடைக்கும்.

சாதாரணமாக அழகுக்காகவும் நிழலுக்காகவும் பூங்காக்கள், பிரயாணிகளின் விடுதிகள் பள்ளி, கல்லூரிகள், அரசாங்க அலுவலகங்கள் முதலிய இடங்களில் கிளைரிசிடியா மரமாக வளரவிடப்படுகின்றன. இந்த இடங்களிலிருந்து சுலபமாக விதைகள் சேகரிக்கலாம். பிப்ரவரியிலிருந்து ஏப்ரல் வரை காய்கள் முற்றி வெடித்துக் கொண்டிருக்கும். முற்றின காய்களை வெடிப்பதற்குமுன் சேகரித்து சாக்கில் விதைகள் வெடித்து விழுமாறு செய்ய வேண்டும்.

கிளைரிசிடியாவை விதை மூலம் நாற்று விட்டும் செடிகளை நடலாம், அல்லது முதிர்ந்த கிளைகளை 1 அடி நீளத் துண்டுகளாக வெட்டி வயல் வரப்புகளில் நட்டும் பயிர் செய்யலாம். இதை "போத்துக்கள்" மூலம் பயிச் செய்தல் என்று சொல்வார்கள்.

எப்போது நடவேண்டும், எங்கெங்கே நடவேண்டும்?

மானாவாரி பூமியில மழை நாட்களில் புரட்டாசி—ஐப்பசியில நடவேண்டும். நஞ்சையிலும் தோட்டக்கால் பூமியிலும் ஆடி—ஆவணி மாதங்களில் கிளைரிசிடியா

நடவேண்டும். இதை வேலிக்காக நடும் பொழுது 2 அடிக்கு ஒன்று வீதம், வயல் வரப்புகளில் நடும் பொழுது 5-6 அடிக்கு ஒன்று வீதம் நடவு செய்ய வேண்டும்.

கிளிரிசிடியா நடுவதற்கு பிரத்தியேகமான நிலம் தேவையில்லை. வேலிக் கால்களிலும், வயல் வரப்பு களிலும், ரோடு ஓரங்களிலும் வாய்க்கால் கரைகளி லும் நடலாம். கிளிரிசிடியா எப்பொழுதும் பச்சையாக இருப்பதாலும், இதன் பூக்கள் அழகாயிருப்பதாலும் பள்ளிகள், வீடுகள், பூங்கா, சாலைகள் ஆகியவற்றில் நட்டால் அழகூட்டும். விதையும் சேகரம் செய்ய லாம்.

கிளிரிசிடியா கிளைகள் (போத்துக்கள்) நடும் முறை.

கிளிரிசிடியா போத்துக்களை 3/4 முதல் 1 அடி துண்டுகளாக வெட்டி வயல் வரப்புகளில் 4–5 அடிக்கு ஒன்றாக நடலாம். இவ்வாறு நடப்படும் போத்தில் 2/3 பாகம் பூமிக்குள் இருக்க வேண்டும். துளிர் மொட் டுகள் மேல் நோக்கி இருக்குமாறு நடவேண்டும். நட்டு மண்ணை நன்றாக கெட்டித்துவிட வேண்டும்.

இல்லாவிட்டால் நடக்கும் போது கிளைகள் அசைவுண்டு வேர் ஊன்றாமல் காய்ந்துவிடும். நட்டவுடன் கிளையின் தலைப்பில் சாணியும், களிமண்ணும், கலந்த சாந்தைப் பூசிவிடவேண்டும். இந்த இரண்டு குறிப்புகளையும் கவனிக்காமையினால்தான் அநேக இடங்களில் நட்ட கிளைகள் ஏராளமாகப் பட்டுப் போகின்றன.

நாற்றுவிட்டும், கிளிரிசிடியாவைப் பயிராக்கலாம். ஏப்ரல்–மே மாதங்களில் நாற்று விடவேண்டும். 45-60 நாளான நாற்றுகளை மேற்சொன்ன இடை வெளியிலேயே நடவேண்டும். தழை உரத்துக்காக வளர்க்கும் கிளிரி சிடியாவை மரமாக வளரவிடக்கூடாது. நட்ட 18 மாதங் களுக்குப் பிறகு முதன் முறை தழையை வெட்டவும். தழை வெட்டினபின் மாதத்தில் பக்கக் கிளைகள் நிறை யக் கிளைத்து வளர்ந்து தழை நிறையக் கிடைக்கும். வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை தழை வெட்டலாம்.

ஆகவே செலவின்றி வருடந்தோறும் தழை கிடைக்க கிளிரிசிடியா நட்டுப் பயிர் செய்யுங்கள்.

"பசுந்தாளுரமிட்டுப் பயிர் வளம் பெருக்குவோம்."

தமிழ்நாட்டில் கலப்புரங்களின் புதிய விலைகள்.

கலப்புர எண்.	பயிர் ஊட்டகங்களின் அளவு. தழைச் சத்து	மணிச் சத்து	சாம்பல் சத்து	கலப்புரம் தயாரிக்குமிடத்திலேயே சில்லறையாக விற்பதானால் அதிக பட்ச விலை (டன்னுக்கு விற்பனை வரி உட்பட). பாலிதீன் பையில்லாமல் ரூ.	பாலிதீன் பையுடன் ரூ.	சில்லறை விற்பனைக் கடையில் சில்லறையாக விற்கும் பொழுது விற்பனை வரி போக்குவரத்து செலவு உட்பட ஒரு டன்னுக்கு விலை. பாலிதீன் பையில்லாமல் ரூ.	பாலிதீன் டையுடன் ரூ.
1	14 (14)	7 (3.5)	0	422	432	471	482
2	12 (12)	6 (3)	6	406	416	454	465
3	6 (6)	6 (3)	12	324	334	367	377
4	6 (6)	12 (6)	6	372	382	418	428
5	9 (9)	9 (9)	9	460	470	511	522
6	6 (6)	12 (6)	12	410	420	458	468
6A	5 (5)	10 (5)	10	349	358	391	401
7	4 (4)	8 (8)	12	359	369	404	414
8	12 (12)	4 (2)	12	415	425	464	474
9	16 (16)	0	12	438	448	488	499
10	16 (15)	5 (2.5)	5	445	455	496	506
11	16 (16)	4 (2)	4	445	455	495	506
12	10 (10)	5 (2·5)	15	409	419	457	467
13	3 (3)	9 (4·5)	9	288	298	328	339
14	10 (10)	5 (2·5)	10	377	387	423	434
15	6 (6)	9 (9)	6	381	391	427	438

விவசாய நெறியாளர், சென்னை.

சென்னைமாகாணத்தில்

நெய் 'அக்மார்க்' தரம்பிரித்தல்

ஆ. மகாராஜா, பி.எஸ்ஸி, பி.எஸ்ஸி (விவசாயம்), விற்பனை உதவியாளர், மாநில விற்பனை அலுவலகம்.

நெய் என்றால் என்ன? நெய் என்பது வெண்ணெய்யிலிருக்கும் அதிகப்படியான கொழுப்புப் பொருள். அது நீரிலே மிதக்கும், நீராவியில் கரையும். ஆடு, மாடுகளின் பாலினின்று எடுக்கும் வெண்ணெயை நன்றாக சூடேற்றினால் அதினின்று நீரானது ஆவியாய் போன பின்பு, எஞ்சி இருக்கும் கொழுப்பு எண்ணெயாகி நெய்யாகிறது என்று பம்பாய் நெய் கலவை விதி விவரித்து கூறுகின்றது. வெண்ணெயை விட மணத்திலும், ருசியிலும் நெய் சிறந்தது.

நெய், கறி, மீன், காய்கறிகள், இனிப்புவகைகள் தயாரிப்பில் உபயோகப்படுகிறது. மேலும் தென்னாட்டில் அரிசி உணவில் மணத்திற்காக நெய்யையும், வட நாட்டில் சப்பாத்தயில் நெய்யை மணத்திற்காக சேர்த்துக் கொள்ளுகின்றனர். தென்னிந்தியாவில் வெண்ணெயை 125 முதல் 128 டிகிரி வரை உஷ்ணமாக்கி அதினின்று நெய்யைப் பெறுகிறார்கள். வட இந்தியாவில் 110 முதல் 115 வரை வெண்ணெயை சூடேற்றி உருக்கி உபயோகப்படுத்துகின்றனர். நெய்யின் மணமும், குணமும் வெண்ணெயை உருக்கும் வெப்பநிலையைப் பொருத்துள்ளது.

சென்னை மாகாணத்தில் கோயம்புத்தூர், சேலம் ஜில்லாக்களிலும், மற்றும் திருச்சி, மதுரை ஜில்லாக்களின் பல பகுதிகளிலும், நெய் அதிக அளவில் தயாரிக்கப்படுகிறது. சென்னை மாகாணத்தில் 25 மில்லியன் கி. கிராம் நெய் தயாரிக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மற்ற பொருள்களைக் கலப்படம் செய்வதைவிட நெய்யை கலப்படம் செய்வது மிக எளிது. தாவர நெய்யானது இவ்விதம் அடிக்கடி நெய்யுடன் கலப்படம் செய்யப்படுகிறது. சென்னை மாகாணத்தில் "வனஸ்பதி" என்ற தாவர நெய்யுடன் மாட்டு நெய் கலந்து விற்பது பழகத்திலிருந்து வருகின்றது. இப்படிக் கலப்பது உடல் நலத்தைப் பாதிக்கிறது, அதனால் தண்டனைக்குரியது. ஆகவே நெய்யில் கலப்பில்லாமல் நல்ல சுத்தமான நெய்யை பெற தரம் பிரித்தல் முக்கியமானதாக கருதப்படுகிறது. என்வே நெய் 1937-ம் ஆண்டு விவசாய உற்பத்திப் பொருள் விற்பனை செய்தலும், தரம் பிரித்தலும் என்ற விதியின் கீழும், 1938-ம் ஆண்டு நெய்த் தரம் பிரித்தலும் விற்பனையும் என்ற சட்டத்தின் கீழும் அக்மார்க் நெய்யாக தரம் பிரிக்கப்படுகிறது. இப்படி தரம் பிரிக்கப்பட்ட அக்மார்க் நெய்யானது சுத்தமானது. எருமை பாலிலிருந்தோ அல்லது பசுவின் பாலிலிருந்தோ தயார் செய்யப்பட்டது. அக்மார்ச் தரம் பிரிக்க நெய் தயாரிக்கும் பல இடங்களிலிருந்து நெய்யை மாகாண நெய் எண்ணெய் தரம் பிரிக்கும் சோதனைக் கூடம் அரசாங்க சோதனைக் கூடத்திற்குக் கொண்டுவருகிறார்கள். தூய்மைக்கேற்ப தரம் பிரிக்கப்பட்டு, பிரத்தியேகமான டின்களில் அடைத்து நன்றாக மூடி சீல் வைக்கப்படுகிறது. 'அக்மார்க்' என்ற முத்திரை உள்ள லேபில் அதன்மேல் ஒட்டப்படுகிறது

கீழே குறிப்பிட்டுள்ள பரிசோதனைகள் நெய்யின் தூய்மையைப் பரிசோதிக்கவும், அதைத் தரம் பிரிக்கவும், உபயோகப்படுத்தப்படுகின்றன:—

1. பௌடாயின் சோதனை
2. ஆர். எம் அளவு
3. ஈரஅளவு காணல்
4. பூடைரோ ரிப்ரேக்டோமீட்டர் ரீடிங் 40சி
5. போலன்ஸ்கி அளவு
6. அமிலத்தன்மையை சோதித்தல்

அக்மார்க் நெய் கீழ்க்கண்ட இரண்டு தரங்களில் கிடைக்கும். அவையாவன, (1) பிரத்தியேக தரம் (ஸ்பெஷல்) (2) பொதுவான தரம் (ஜெனரல்). நெய்யானது விற்பனைக்கு முன்பு தரம்பிரித்து விற்பதற்காக நம் சென்னை அரசாங்கம் தமிழ்நாட்டில் ஒன்பது நெய், எண்ணெய் தரம் பிரிக்கும் பரிசோதனைக் கூடங்களை அமைத்துள்ளது, அவை, சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, கரூர். மதுரை, விருதநகர், சேலம், திருநெல்வேலி, விழுப்புரம் முதலிய இடங்களில் நிறுவபபட்டு, திறம்பட செயல்பட்டு வருகின்றன. இப்பரிசோதனைக் கூடங்களில் நெய்யைத் தரம் பிரிக்கக் கட்டணம் கிடையாது. இப்பரிசோதனைக் கூடங்களில் தற்பொழுது மொத்தம் 47 தயாரிப்பாளர்களுக்கு நெய் தரம் பிரித்து 'அக்மார்க்' போடப்படுகிறது.

கடந்த ஐந்தாண்டு காலமாக அக்மார்க்கின்கீழ் தரம் பிரிக்கப்பட்ட நெய்யின் அளவும், மதிப்பீடும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

	வருடம்	அளவு குண்டாலில்	மதீப்பீடு ரூபாயில்
1.	1960—61	9216	61,78,400
2.	1961—62	10239	70,64,900
3.	1962—63	10160	58,01,360
4.	1963—64	13095	87,87,600
5.	1964—65	12256	80,03,700
6.	1965—66	13247	1,15,40,554

மேலே உள்ள அட்டவணை நெய் தரம் பிரிக்கும் பழக்கம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது என்பதைக் காட்டுகிறது. நெய்யை அக்மார்க் தரம் பிரித்தல் வியாபாரத்திற்கு மட்டுமல்ல உண்போரின் ருசி உடல் நலம் எல்லாவற்றுக்குமே நல்லது.

திருநெல்வேலி மாவட்டத்தில் நெல்பயிருக்குப்பின் சணல்நார் [சணப்பு] சாகுபடி

பொ. இரத்தினம், பி.எஸ்ஸி. (வேளாண்மை), பொ. திருஞானசம்பந்தன், பி.எஸ்ஸி. (வேளாண்மை உழவியல் உதவியாளர்கள், கரையிருப்பு.)

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி பாசனப் பகுதியில் நெல் முக்கியப் பயிராகும். ஜூன்-ஜூலை மாதத்தில் கார் பயிர் (குறுகிய காலப் பயிர்) சாகுபடிக்குப்பின் தொடர்ந்து செப்ரம்பர்–அக்டோபர் மாதத்தில் பிசானம் (நீண்ட காலப் பயிர்) சாகுபடி நடைபெறுகின்றது. பொதுவாக இப்பகுதியில் பிசானத்திற்குப்பின் மார்ச்சு மாதம் முதல் ஜூன் மாதம் வரை நிலம் தரிசாக விடப்படுகிறது. சில பகுதிகளில் உளுந்து சாகுபடி செய்யப்படுகிறது. ஆனுல் கடைய நல்லூர், இலஞ்சி, நரசிங்கநல்லூர், கோபால சமுத்திரம், ஆம்பூர், பள்ளிக்கால், உடையார்பட்டி முதலிய இடங்களில் சணப்பு சணல் நார் எடுப்பதற்கு பயிரிடப்படுகின்றது. இப்பகுதிகளின் சணப்பு நார் சாகுபடிக் குறிப்புகளையும், வருவாயையும் இக்கட்டுரை தெரிவிக்கிறது.

சணப்பு சாகுபடி

பிசானம் நெல் அறுவடைக்குப் பின் நிலத்தை ஒரு முறை போஸ் கலப்பையால் பதத்தில் உழுது பின்னர் ஐந்து நாட்கள் கழித்து மீண்டும் வயலில் நீர்கட்டி, சணப்பு விதைகளை ஏக்கருக்கு 40 பட்டணம் படி (சுமார் 55 கிலோ) வீதம் விதைக்கப்படுகின்றது. இதனுல் விதைத்த விதைகள் நன்கு நீரில் ஊற ஏதுவாக உள்ளது. பின்னர் சில மணி நேரம் கழித்து ஒரு தரம் மரம் அடிக்கப்படுகின்றது. இதனுல் விதைகள் நன்கு மூடப்படுகின்றன, வயலும் சமப்படுத்தப் படுகின்றது. பின்னர் வயலில் வடிகால்கள் தோண்டி நீரை வயலிலிருந்து வடிகட்டப்படும். அந்த ஈரத்திலேயே விதை ஐந்து ஆறு நாட்களில் முளைத்து வளர ஆரம்பித்துவிடுகின்றது. இவ்வாறு வளர்ந்துவரும் பயிருக்கு நீர் பாய்ச்சுதல் மிகவும் அவசியமாகும். அதற்கு குறு மண் கலந்த நிலமாய் இருந்தால் 10 நாட்களுக்கு ஒரு முறையும், களிமண் நிலமாய் இருந்தால் 13 முதல் 15 நாட்களுக்கு ஒருமுறையும் நீர் பாய்ச்சப்படுகின்றது. இடை இடையேத் கோடைத் தூரல்கள் இருந்தால் பயிர் நன்கு செழித்து வளர்கின்றது. இதனுல் நீர்பாய்ச்சும் செலவும் குறைகின்றது. இப்பயிருக்கு 10 முதல் 12 தடவை நீர் பாய்ச்சப்படுகின்றது. இக்காலங்களில் குளங்களில் நீர் வற்றிவிடுவதால் நான்கு அல்லது ஐந்து தண்ணீருக்குப் பின் இறைவை நீர்தான் பாய்ச்சப்படுகின்றது. இதனுல் செலவு சற்று அதிகமாகின்றது.

அறுவடை

சணல் பயிர் 110 முதல் 120 நாட்களில் அறுவடை பதத்தை அடைகின்றது. இப்பொழுது அது சுமார் 8 அடிகள் வரை வளர்ந்து இலைகள் பழுத்து உதிர்ந்து, தண்டும் நெற்றுமாகத் தோற்றமளிக்கும். இப்பருவத்தில் பயிரை அறுத்து சிறுசிறு கட்டுகளாகக் கட்டி வயலிலேயே காயப்போடவேண்டும். இப்பொழுது எஞ்சி உள்ள ஓரிரண்டு இலைகளும் தண்டினின்றும் உதிர்ந்து வயலில் மக்க ஆரம்பிக்கும். நான்கைந்து நாட்களில் வயலில் உலரப்போடப்பட்ட சிறு கட்டுகளை பெருங்கட்டுகளாக கட்டி களத்திற்கு கொண்டுவந்து நன்கு தட்டி நெற்றுகளைப் பிரித்து விதைகள் சேகரிக்கப்படுகின்றது. இவ்வாறு நெற்று அகற்றிய தண்டுகள் நார் உரிக்கத் தயாராகின்றது.

நார் எடுத்தல்

விதை அகற்றப்பட்ட காய்ந்த சணப்பு தண்டுகளை கட்டாகக் கட்டி நீரில் நான்கு முதல் ஐந்து நாட்கள் ஊற வைத்து, அவ்வாறு ஊறிய தண்டைகையால் அலசி, நீரிலேயே நன்கு அடிக்கப்படுகின்றது. இதனால் நார் உறிந்து தண்டின் நுனிப்பகுதிக்கு வந்து விடுகின்றது. இந்த நாரை நன்கு அலசிக் காயவைத்து நாரை மட்டும் எடுத்து, சிறுசிறு முடிச்சுகளாகக் கட்டி விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இவ்வாறு நாரை எடுக்கக் கூலியாக நார் உரிக்கப்பட்ட தண்டையே கொடுக்கப்படுகிறது. இதனால் நார் எடுக்கத் தனிச் செலவு இல்லை. சாதாரணமாக 1 ஏக்கர் சணப்பிலிருந்து நார் எடுக்க 35 முதல் 38 ஆட்கள் தேவைப்படுகின்றது.

மகசூல்.—சணப்பு விதை ஒரு ஏக்கர் பயிரில் சாதாரணமாக 4 மூட்டை (50 பட்டணம் படி கொண்ட மூட்டைகள்) யும், (280 கிலோ) அதிகபட்சமாக 6 மூட்டைகள் வரை கிடைக்கும். சணப்பு நார் ஒரு ஏக்கருக்கு 50 துலாம் (300 கிலோ) வரை கிடைக்கும். நார் உரிக்கப்பட்ட தண்டு ஏக்கருக்கு 72 முதல் 76 பெரிய கட்டுகள் வரை கிடைக்கும்.

பயன்கள்

(1) சணப்பு பயிர் நிலம் தரிசாக இருக்கும் காலத்தில் பயிரிடப்படுவதால் முக்கிய பயிரான நெல் சாகுபடியில் சற்றும் இடையூறில்லாமல் இருந்து நல்ல பயிற் சுழற்சியாக அமைகிறது. உதிர்ந்த இலைகளும் வேர் முடிச்சுகளோடு கூடிய வேர்ப் பகுதியும் வயலில் மக்குவதால் இப் பசுந்தாளுரப் பயிர் நிலத்தின் தரத்தை உயர்த்தப் பயன்படுகின்றது.

(2) சணப்பு விதைகளும் எடுக்கப்படுவதால் கோடைப் பயிர் நிகர வருமானமாக இது கிடைக்கின்றது. சணப்பு விதை பசுந்தாளுரப் பயிருக்கு விற்கப்படுகின்றது.

(3) சணல் நார் மீன் வலைகள் பின்னவும், கம்பளங்கள் செய்யவும் கடல் நீரில் ஊறிய நார் வீரியமாய் இருப்பதால் கப்பல்களில் பயன்படுத்தப்படும் கயிறுகள் தயாரிக்கவும் பயன்படுகின்றது.

(4) சணப்பு நார் பிரித்து எடுக்கப்பட்ட தண்டுகள் அடுப்பெரிக்கப் பயன்படுகின்றது. ஒரு கட்டு சாதாரணமாக ஒரு ரூபாய்க்கு விற்கின்றது.

சணப்பு நார் அனுப்பப்படும் இடங்கள்

திருநெல்வேலி மாவட்டத்தில் கோபாலசமுத்திரம் என்னும் ஊரில்உள்ள அரசினர் ரத்தினக் கம்பளத் தொழிற்சாலைக்கு முக்கியமாக அனுப்பப்படுகின்றது. இங்கு நாரைத் தரம்பிரித்து பல வண்ணச் சாயங்கள் கொடுத்துக்கண்ணைக் கவரும் வகையில் தரை விரிப்புகளும், கம்பளங்களும் தயாரிக்கப்படுகின்றன. கேரளத்தில் உள்ள கொல்லம், ஆலப்புழை, கோட்டயம் முதலிய இடங்களுக்கும், தமிழ்நாட்டிலுள்ள சேலம், ராசிபுரம் ஆகிய இடங்களுக்கும் மீன் வலை பின்னுவதற்காக அனுப்பப்படுன்றது.

பசுந்தாளுரப் பயிர் வகையைச் சேர்ந்த இச்சணப்புப் பயிர் இவ்வட்டாரத்திற்கு நல்ல பயிர் சுழற்சித் திட்டத்தைக் கொடுக்கிறது. உதிரும் இலைகள் உரமாகப் பயன்பட்டு நிலத்தின் தரத்தை உயர்த்தும்; சணல் நார் விதை இவை மூலம் லாபம் தரும், பணப்பயிராகிறது. தொழில் வளத்திற்கு கச்சாப் பொருளை (நார்)க் கொடுக்கின்றது. காய்ந்த சக்கைத் தண்டுகள் நல்ல எரிபொருளாகிறது. ஆகவே இப்பயிரை இன்னும் விரிவாகப் பயிரிடலாம்.

ஒரு ஏக்கர் சாகுபடிச் செலவு

		ரூ.	பை.
1	நிலத்தை ஒரு முறை உழச் செலவு	12	50
2	நீர்கட்டி, விதை விதைத்து, வடிகால்கள் அமைக்க.	6	00
3	விதை 55 கிலோ (1 கிலோ 65 பைசா வீதம்).	35	25
4	குளத்திலிருந்து கால்வாய் மூலம் நீர்பாய்ச்சவும் பின்னர் இறைவை மூலம் நீர் பாய்ச்சவும் மொத்தச் செலவு.	56	00
5	சணல் பயிரை அறுவடை செய்து சிறு கட்டுகளாகக் கட்ட குத்தகையாக செலவு (8 செண்டுக்கு $1\frac{1}{2}$ ரூபாய் வீதம்).	18	75
6	களத்திற்கு சுமக்க சுமைகூலி ..	12	00
7	களத்தில் அடித்து நெற்றுகளிலிருந்து விதைகள் சேகரிக்க.	15	00
8	* நிலக் குத்தகை வியாபாரிகள் பயிரிட்டால் நிலச்சுவான்களுக்கு கொடுக்கும் தொகை.	62	50
	மொத்த சாகுபடிச் செலவு ..	218	00

வருமானம்

சணல் விதை 1 மூட்டை 51 ரூபாய் வீதம் 4 மூட்டையும்.	204	00
சணல் நார் 50 துலாம் (1 துலாம் 8 ரூபாய் வீதம்).	400	00
மொத்த வருமானம் ..	604	00

லாபம்

மொத்த வருமானம்	604	00
மொத்த சாகுபடிச் செலவு ..	218	00
நிகர லாபம் ..	386	00

* விவசாயிகளே பயிரிட்டால் குத்தகைப் பணமான ரூபாய் 62·50 மீதியாகும்.

குறிப்பு.—மேற்கண்ட விவரங்கள் கட்டுரை ஆசிரியர்களால் நேரடியாகச் சேகரிக்கப்பட்டவை.

நம் உணவுப் பழக்கம் தானியமும் பருப்பு வகைகளும்

[சாந்தி சுதர்சனம், B.Sc. B.T.]

ஒவ்வொருவருக்குத் தேவையான அளவு உணவு நம் நாட்டில் இல்லை. அதோடு மட்டுமின்றி மக்கள் ஆரோக்கியத்திற்கான சரியான சத்து உணவுப் பொருட்களும் போதிய அளவு நம் நாட்டில் இல்லை. இந்த உண்மையை இதற்குமுன் எந்நாளையும் விட இப்பொழுது நாம் நன்ருக உணருகிருேம். நமது உணவு அளவிலும் தரத்திலும் குறைவுபட்டதாக இருக்கிறது. மக்களுக்கு ''நல் நிறை உணவு இன்மை'' நம்நாட்டில் வியாபித்துள்ளது. குறிப்பாக குறைந்த வருவாயுள்ள மக்களிடையே இக்குறை முக்கியமாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம் உணவுப் பொருட்களின் அதிக விலை, சத்துள்ள உணவுப் பொருட்கள் கிடைக்காமல் தவருன உணவுப் பழக்கம், சமசத்துள்ள உணவைப் பற்றி அறியாமை ஆகியவை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். குறைபாடுகள் நாளுக்கு நாள் மக்கள பெருக்கத்தால் மேலும் மேலும் விரிவடைந்து கொண்டு செல்கிறது. சத்துணவு மட்டிலுமல்ல உணவு தானியங்களிலும் ஏற்பட்டுள்ள இக்கட்டான பற்ருக்குறை சூழ்நிலையில் கிடைக்கக்கூடிய உணவுப் பொருட்களிலிருந்து எவ்வாறு நல்லபலனை அடையலாம் என்பதோடு மட்டுமின்றி நம்மால் புறக்கணிக்கப்படும் நல்ல சத்துள்ள மலிவான உணவுப் பொருட்களை பிரபலப்படுத்துவதும் நமது கடமையாகும்.

தென்னகத்தில் குறிப்பாக தமிழ்நாட்டில் அரிசியே பெருமளவு உணவாக உள்ளது. நாளும் நாம் சாப்பிடும் உணவை நினைத்தால் எந்த ஒரு நேரத்திலும் அரிசி சேராத உணவை நாம் காண்பது அரிது. காலையில் இட்லி அல்லது தோசை, மதியம் சோறும் சாப்பாடும் மீண்டும் இரவில் சோறும் குழம்பும். இதில் எந்த நேரத்தில் அரிசி யில்லை ! ஒரே வேளையில் கூட முதலில் சாம்பாரும் சோறும் இரண்டாவது ரசமும் சோறும் மூன்ருவது தயிரும் சோறும். எல்லாம் அரிசி மயம்! காய்கறியோ பருப்போ போதிய அளவு உண்பதில்லை. 2-3 வயதுள்ள குழந்தைக்கு உணவு கொடுக்கும் பொழுது சோற்றையே வயிறு நிரம்பும் வரை செலுத்துகிருேம். அதில்தான் நமக்குத் திருப்தி. அக்குழந்தையின் பசி தீர்க்கப்பட்டதா? உடலில் முழு வளர்ச்சிக்கான தேவைதான் உண்மைப் பசியாகும். அதைச் சரி செய்யாதபோது பசி தீர்ந்தது என்று கூற முடியாது.

அரிசி நம் உடம்பிற்கு என்னதான் செய்கின்றது என்று பார்ப்போம். நம் உடலுக்கு வளர்ச்சிக்கான உணவு, சக்திக்கான உணவு, ஆரோக்கியத்திற்கான உணவு தேவைப்படுகிறது. உடல் வளர்ச்சியைக் கொடுப்பது புரதம், அதாவது பயறு வகைகள், முட்டை மாமிசம், மீன், பால் முதலியனவாகும். சக்தியைத் தருவது மாவுப் பண்டமாம் அதாவது தானியங்கள், சர்க்கரைப் பொருட்கள், கொழுப்பு, எண்ணெய், வெண்ணெய் முதலியவைகள் ஆகும். ஆரோக்கியம் தருவதும் தேய்ந்த தசைப் பொருட்களைச் சரி செய்வதும், வைட்டமின்களும் தாதுப் பொருட்களும் ஆகும். இச் சத்துக்கள் காய்கறிகள், குறிப்பாக கீரைகள், பழங்கள் இவற்றில் காணப்படுகின்றது. ஆனல். நமது உணவோ அரிசியிலே தான் அடங்குகிறது. காய்கறி பருப்பு இவை மிகக் குறைவாக உள்ளது என்று சொல்லும் போது நமது உடல் வளர்ச்சிக்கான புரதச்சத்தையும் ஆரோக்கியத்தைக் கொடுத்து உடல் தேய்மானத்தை ஈடு செய்கின்ற வைட்டமின் போன்ற ஊட்டச் சத்துக்களையும் உட்கொள்ளத் தவறுகிருேம் என்பதாகும். இந்திய மருத்துவத் துறைக் கவுன்சில் அநேக கணக்கெடுப்புகள் நடத்தியது. இந்தியாவில் குழந்தைகள் அதிக அளவில் ஊட்டக்குறைமான நோய்களால் பாதிக்கப்படுகின்றனர் என்பதை இது காட்டுகிறது. சென்னை மாநிலத்தில் ஊட்டக்குறைமான நோய் முக்கியமாக புரதப் பொருள் வைட்டமின் இல்லாத உணவுகளால் தான் ஏற்படுகிறது என்பதைக் குறிப்பாகத் தெளிவுபடுத்துகிறது. மாலைக்கண் புள்ளிநோய் (Bitots spots) பள்ளிக் குழந்தைகளில் பெருவாரியாகக் காணப்படுகிறது. இதற்குக் காரணம்

(19-ம் பக்கம் பார்க்க)

கேள்வியும் பதிலும்

ம் கே. லிங்கையா, விரிவினை வல்லுநர்; கே. எஸ். குட்டி முதலியார், உதவி விரிவினை வல்லுநர்;
த. சோமசுந்தரம், விரிவினை விளக்குநர், விஸ்தரிப்பு பகுதி.)

[விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்வதற்காக இந்தப் பகுதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது இதைப் பயன்படுத்தி விவசாயிகள் தங்களுடைய சந்தேகங்களுக்கு வேண்டிய விளக்கங்கள் பெறலாம். கேள்விகளை தெளிவாக எழுதி, தங்கள் முகவரியுடன் "மேழிச்செல்வம், கேள்வியும் பதிலும்" விஸ்தரிப்பு நிபுணர், விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடம், கோயமுத்தூர்-3, என்ற முகவரிக்கு அனுப்பவும். கேள்விகளுக்குரிய பதில் பத்திரிகை மூலமாகத்தான் தெரிவிக்கப்படும்—ஆசிரியர்.]

திரு. R. பாண்டி,
வள்ளியூர்.

வினு: 1. பழவகைகள் மரங்களாக இருந்தாலும் சரி, செடிகளாக இருந்தாலும் சரி, இவைகளுக்கு ஏற்ற மண் எது?

விடை: பழ வர்க்கங்களும், பூ, காய் செடி கொடிகளும் மணற்பாங்கான செம்மண் நிலங்களில் மிக நன்முக வளரும்.

வினு: 2. கிழங்கு வகைகளுக்கு மிக ஏற்ற மண் எது?

விடை: கிழங்கு வகைகள் பூமியில் நன்கு வளர்ச்சி அடைவதற்கு மணற்பாங்கான நிலங்கள் மிகவும் ஏற்றவை (Sandy loam soil)

வினு: 3. மலங்காடுகளில் வளரும் மரமட்டைகளுக்கு மிக ஏற்ற மண் எது?

விடை: மலைச்சாரலில் வளரும் மரங்களுக்கு அமிலத் தன்மையுள்ள மண் மிகப் பொருத்தமானது.

திரு. N. செந்தாமரை கண்ணன்,
வாணியம்பாளையம்.

வினு: 4. விவசாயத்திற்காக 14 ஹார்ஸ் பவர் கொண்ட ஒரு டிராக்டர் வாங்கலாமென நினைக்கிறேன். இது விவசாயத்திற்கு பயன்படுமா? இதில் விவசாயிக்கு ஏதாவது சலுகை உண்டா? இதை வாங்குவதற்கு எங்கு ஆர்டர் கொடுக்க வேண்டும்?

விடை: விவசாயத்திற்காக 14 ஹார்ஸ் பவர் கொண்ட டிராக்டர் வாங்கலாம். இது விவசாயத்திற்கு பயன்படும். இப்பொழுது 14 ஹார்ஸ் பவர் ரஷ்யன் டிராக்டர்கள் கொடுக்கப்படுகிறது. இது அரசாங்கத்தின் தவணைக்கடன் திட்டத்திலும் கொடுக்கப்படுகிறது. மேற்படி டிராக்டர் வாங்க வேண்டுமானுல் "நேஷனல் இன்ஜினீயரிங் கம்பெனி, நேத்தாஜி சுபாஸ்சந்திரபோஸ் ரோடு சென்னை–1" என்ற கம்பெனியுடன் தொடர்பு கொள்ளலாம். தவணைக் கடன் திட்டத்தில் டிராக்டர் வாங்க வேண்டுமானுல், அந்தந்த பகுதிகளின் மாவட்ட விவசாய அதிகாரிகளையோ, விவசாய உதவிப் பொறியாளர்களையோ விசாரிக்க வேண்டும்.

திரு. மா. சந்திரன்,
திருப்பூர்.

வினு: 5. அம்மோனியம் உரத்தால் நிலத்திற்கு ஏற்படும் நன்மை, தீமைகள் யாவை?

விடை: அம்மோனியம் சல்பேட் உரம் பயிர்களுக்கு வேண்டிய தழைச்சத்தை அளிக்கிறது. இது செயற்கை இரசாயன உரம். தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரம் அல்லது தழை உரம் நிலத்திற்கு இட்டபின் அம்மோனியம் சல்பேட் உரமிட்டால் எவ்விதக் கெடுதலும் இல்லை.

வினு: 6. நமது நாட்டில் இப்போது உபயோகிக்கும் முக்கிய இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள் யாவை? (அவைகளின் பெயர், அதில் அடங்கிய சத்துப் பொருள்களின் அளவு, உபயோகிக்கும் விதம், பாதுகாப்பு, எந்தெந்த பயிர்களுக்கு எந்தெந்த அளவில் உபயோகப்படுத்த வேண்டும் என்பதைப் பற்றி தெரியப்படுத்தவும்.

விடை: நமது நாட்டில் இப்பொழுது உபயோகிக்கும் இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகள், அவை களில் அடங்கியுள்ள சத்துக்கள், அவைகளை உப யோகிக்கும் முறை, அளவு முதலியவைகளை உங்க ளுடைய வட்டார விவசாய விஸ்தரிப்பு அலுவலரை அணுகி தெரிந்து கொள்ளவும்.

திரு. K. M. மூக்கையா,
கமுத்திரிக்கம்பட்டி.

வினா: 7. குத்துக்கடலை (இறைவைக் கடலை) எந்த மாதம் பயிர் செய்தால் நல்லது? எந்த சமயங் களில் எப்படி உரம் கொடுக்க வேண்டும். நல்ல முறையில் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு எத்தனை கிலோ மகசூல் கிடைக்கும்?

விடை: டி.எம்.வி 2 எனப்படும் கொத்துக் கடலையை ஜனவரி முதல் வாரத்தில் விதைப்பது சிறந்தது. இதற்கு அடியுரமாக ஏக்கருக்கு 10 வண்டி தொழு உரம் அல்லது கம்போஸ்ட் உரமிடவும். ஏக்கருக்கு 7 கிலோ தழைச்சத்து கிடைக்கும் வகையில் 35 கிலோ அம்மோனியம் சல்பேட் அல்லது கால்சியம் அம்மோ னியம் நைட்ரேட்டும், 21 கிலோ மணிச்சத்து கிடைக்கும் வகையில் 127½ கிலோ சூப்பர் பாஸ் பேட்டும், 21 கிலோ சாம்பல் சத்து கிடைக்கும் வகையில் 36 கிலோ மியூரியேட் ஆப் பொட்டாஷ் உரமும் அல்லது 150 கிலோ கலப்பு உரம் நெ 7 (4-8-12)ம் ஒரே முறையில் விதைப்புக்கு முன் இடவேண்டும்.

இது ஏக்கருக்கு 1,100 கிலோ மகசூல் கொடுக்கும்.

திரு. கே. பி. துரைசாமி,
காஞ்சிக் கோயில்.

வினா: 8. கலப்பு வீரிய மக்காச் சோளம் பயிரிடும் முறை பற்றி பராபவ ௵ ஆவணி 1966-ல் வந்த மேழிச் செல்வத்தில் நன்கு விளக்கப்பட்டுள்ளது, அதற்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறோம். வேர்க்கடலை பயிர் செய்திருக்கும் நிலத் தில் வாய்க்கால் வரப்புகளில் கலப்பு மக்காச் சோளம் பயிரிடலாமா?

விடை: பயிர் செய்யலாம். கலப்பு மக்காச் சோளப் பயிருக்கு உரிய முறையில் உரமிடுவதும் அவசிய மாகும்.

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

வைட்டமின் 'ஏ' சத்து இல்லாதது தான். இச்சத்து மஞ்சள் அல்லது ஆரஞ்சு நிறக் காய்கறிகள், மா, பப்பாளி போன்ற பழங்கள் முதலியவற்றில் இருக்கிறது. மைனுவாய் வைட்டமின் 'பி' இன்மையாலும், வளர்ச்சி யின்மை வயிறு பெருக்கம் போன்றவை புரதச் சத்து இன்மையாலும் ஏற்படுகின்றன. இந் நோய் (Kwashiskar) என்று சொல்லப்படுகிறது. தாய்மார்கள், கர்ப்பிணிகள் இரத்த சோகையால் அவதிப்படுவதற்கு அவர்கள் உணவில் இரும்புச் சத்து குறைவுதான் காரண மாகும்.

நாம் இப்பொழுது உள்ள நிலையைத் திருத்த வழிகள் என்னென்ன நம் உணவில் எதைபெதைச் சேர்த்துக்கொள்ளலாம் என்பதையும் (செலவையும் மனதில் கொண்டு) எப்படி நம் உணவுப் பழக்கத்தை மாற்றி அமைக்கலாம் என்பதையும் பார்ப்போம்.

முதலில் நாம் சாப்பிடும் அரிசியின் அளவைக் குறைக்க முற்படவேண்டும். ஒரு வேளைக்கு மட்டும் அரிசியையும் மற்ற வேளைக்கு கோதுமை, ராகி, சோளம் போன்ற மற்ற தானியங்களையும் உபயோகப்படுத்த வேண்டும். இந்த தானியங்கள் அரிசியைவிட அதிக ஊட்டச்சத்து உடையவை. அரிசியில் செய்கின்ற பதார்த் தங்களை ராகி, சோளம்; கோதுமை போன்றவற்றின் மாவினுலும் செய்யலாம். ராகிசோள மாவில் இட்லி தோசை செய்யலாம். கோதுமை மாவைக் கொண்டும், சப்பாத்தி, உப்புமா, புட்டு. காய்கறி கலந்த உணவு பாத் முதலியவையும் ராகி மாவில் அடை, கூழ், புட்டு; கேக் போன்றவையும் செய்யலாம். இம்மாதிரியான பண்டங்களை காலை உணவாகத் தயார் செயது உட் கொள்ளலாம். நண்பகல் உணவில் ஒரு பகுதிக்குச் சப்பாத்தியைச் சேர்த்துக் கொண்டு அரிசியின் அளவைக் குறைக்க லாம். பருப்பு, காய்கறி கூட்டு இவற்றைச் சப்பாத்தி யுடன் சேர்த்துக்கொள்ளலாம். பருப்பு புரதச்சத்திற்குப் பெயர் போனது. நம் நாடு பருப்பு வகைகளுக்குப் பெயர் போனது. கூட்டுப் பொறியலும் கடலைப் பருப்பு துவரம்பரப்பு. மைசூர் பருப்பு, சிகப்புப் பருப்பு இவற் றைக் கொண்டு ரகரகமாகத் தயார் செய்யலாம். பருப்பையும் கீரையையும் கலந்து மசியல் செய்து சப் பாத்தியுடன் சாப்பிட்டால் மிகவும் நன்றாக இருக்கும்.

இரவில் சப்பாத்தி அல்லது பருப்பும் தானியங்களும் கலந்த அடை அல்லது சோளத் தோசை உண்ணலாம். அத்துடன் தேங்காய், புளி, இஞ்சி முதலியவை கலந்த சட்டினி அல்லது மாங்காய் நெல்லிக்காய் தொக்கு அல்லது பருப்புப் பொடி, எள்ளுப்பொடி, தேங்காய்ப் பொடி, அல்லது மாங்காய், எலுமிச்சை, நெல்லிக்காய் ஊறுகாய் சேர்த்துக் கொள்ளலாம்.

வளர்ந்து விட்டவர்களிடையே உணவுப் பழக்க மாற் றத்தை ஏற்படுத்துவது கடினம். ஆரம்பம் குழந்தை களிலிருந்து அதுவும் 6 மாதம் ஒரு ஆண்டிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். குழந்தைக்கு பாலூட்டுவதை நிறுத்தியவுடன் இணை உணவு கொடுக்க ஆரம்பிக்கும் போது இம் மாற்றத்தைத் தொடங்கலாம். கடலைப் பால், ராகிமால்ட், கடைந்த உருளைக் கிழங்கு காய்கள், வாழைப்பழம் போன்றவற்றைக் கொடுக்க லாம்.

மரவள்ளி, சக்கரவள்ளி, சேப்பகிழங்கு, கரணை, வாழைக்காய் அல்லது மலிவான கடலை, சோளம், கம்பு, தினை போன்றவற்றை உண்ணலாம்.



வானொலிச் செய்திகள்

அன்புடையீர்!

தென்மேற்கு, பருவ மழை இந்த ஆண்டும் திருப்தி கரமாக இல்லாததால் நீர்த்தேக்கங்களில் தண்ணீர் மட்டம் மிகவும் குறைவாகவே இருந்தது. பயிர்கள் சற்று பிந்திவிட்டபோதிலும் உங்களுடைய அயரா உழைப்பினுலும் சர்க்காரால் அளிக்கப்பட்டுவரும் ஊக்கத்தினுலும் மிகவும் நெருக்கடியான கட்டத்தைத் தாண்டி விட்டோமென்றே கூறலாம். செப்டம்பர் மாத இறுதியில் பெய்த மழை மேட்டூர் மற்றும் இதர நீர்த்தேக்கங்களில் நீர்மட்டத்தைக் கணிசமாக உயர்த்தியிருக்கிறது. இது நமக்கு நம்பிக்கை யூட்டுகிறது.

குறுவை அறுவடை பிந்திப் போவதால் தாளடி பயிறுக்கு குறுகிய காலத்தில், அதாவது 150 நாட்களிலேயே நல்ல மகசூல் கொடுக்கக்கூடிய அம்பாசமுத்திரம் 5 நெல்லைப் பயிரிடலாமென்று ஒலிப்பரப்பில் கூறப்பட்டதை நீங்கள் கேட்டுப் பலனடைந்திருப்பீர்களென்று எண்ணு கிறேன். பயிர்கள் சற்றுப் பிந்திப்போகும்போது பயிர் பாதுகாப்பு முறைகளை தவருமல் அனுசரிப்பது மிகமிக முக்கியம் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நஞ்சை பயிர்செய்யும் விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், மற்ற பயிர்களையும் சாகுபடி செய்யும் உழவர் பெருமக்களுக்கும் பயன்தர வேண்டுமென்று பல விவசாய விஷயங்கள் பற்றி ஒலி பரப்பப்பட்டு வருகின்றது. இவற்றை நீங்கள் தொடர்ந்து கேட்டுவர வேண்டுமென்பதே என் அவா.

இந்த ஒலிபரப்புகள் உங்களுக்குப் பிரயோசனமாக இருந்ததா? இன்னும் என்ன பொருட்கள் பற்றி கேட்க விரும்புகிறீர்கள்? உங்கள் மேலான கருத்துக்களை அவ்வப் போது எனக்குத் தெரிவிப்பீர்களாஞல் விவசாயிகளுக்கான ஒலிபரப்புகள் உங்களுக்கு சிறந்த முறையில் சேவைசெய்ய அவற்றை உபயோகித்துக் கொள்ளலாம். விவசாய வானொலி நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்டுப் பலனடைவ தல்லாமல் உங்கள் நண்பர்களையும் இந்த நல்ல பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள ஊக்கப்படுத்துங்கள். விவசாய உற்பத்தியை அதிகரிப்பதற்கும் நாட்டின் நலனுக்கும் இது ஓர் சிறந்த தொண்டாகும்.

உங்கள் சேவையை பெரும்பேருகக் கருதும்,

ஜா. பே. ஜார்ஜ்,
வானொலி விவசாய அலுவலர்,
36-பி, மவுண்ட் ரோடு,
சென்னை-2.

கழிவு நீர் உபயோகிக்கும் திட்டம்

[கழிவுநீர்த் திட்ட அலுவலர் திரு பிநுகபாணி அவர்களின் 9—9—66 தேதிய உரையின் சுருக்கம்.]

வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரும் உணவு உற்பத்தியை பெருக்க உபயோகமாகும். இந்த நீரில் தாவர வளர்ச்சிக்குத் தேவையான உரச் சத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன.

கழிவு நீர்கொண்டு நடத்தப்படும் பண்ணைகளில் செலவு சாதாரண விவசாயத்தில் ஆகும் செலவைவிட குறைவாகத்தான் ஆகும். வருமானமோ அதிகமாக இருக்கும். விளைச்சல் மிகவும் அதிகமாகக் கிடைக்கும். பல இடங்களில் கேழ்வரகு, சோளம், நெல் முதலிய உணவு தானியங்களும், காய்கறிகளும், தென்னை, வாழை, கரும்பு, அகத்தி முதலிய பயிர்களும் நறுமணம் தரும் புஷ்ப வகைகளும் பயிர் செய்யப்படுகின்றன.

எந்தெந்த ஊர்களின் கழிவு நீரை உபயோகப்படுத்த வாய்ப்பு இருக்கிறதோ அங்கெல்லாம் கழிவுநீர் பண்ணைகளை அமைத்து நாட்டின் உணவுப் பற்றுக்குறை யைப் போக்க பஞ்சாயத்துக்களும் நகரசபைகளும் முன் வரவேண்டும் என்ற நோக்கத்தோடு நம் மத்திய அரசாங்கம் தீவிர சாகுபடி திட்டம் ஒன்றை விவசாய இலாகாவின் மூலம் நடத்த முன் வந்துள்ளது. இதற்காக நிலம் வாங்குவதற்குத் தேவையான தொகையை நகரசபைக்குக் கடனுக கொடுக்க மாநில அரசாங்கம் உத்தரவளித்துள்ளது. கழிவுநீரை இறைத்துக் கொடுத்து பண்ணை அமைப்பதற் கான செலவுகளில் முக்கால் பங்குத் தொகையை கடனுக வும் கால் பங்கு மானியமாகவும் வழங்க மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. இத்திட்டங்களைச் செய்து முடிக்க ஒரு பிரத்தியேக சுகாதார இலாகா இன்ஜினியரிங் பிரிவும் ஈரோட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கடலூர், ஸ்ரீரங்கம் மணச்சநல்லூர்; கரூர், மேட்டூர், ஈரோடு, உடுமலைப்பேட்டை, சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர், பரமக்குடி ஆகிய 10 ஊர்களில் அந்தந்த ஊர் நிர்வாகத்தின் மூலமாக கழிவுநீர் பண்ணைகள் ஏற்படுத்தி நடத்த சர்வே செய்யப்பட்டு வருகிறது.

இவ்விதமாக ஆரம்பித்து நடத்தப்படும் பண்ணைகளில் பயிர் செய்வதில் முக்கிய விதிகளையும் கவனிக்கவேண்டும். கழிவு நீரில் சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் ஜீவராசி களும் இருக்குமாதலால் இப்பண்ணைகளில் விளையும் காய்கறிகளைப் பறித்து கழுவி, பிறகு விற்பனைக்கு அனுப்ப

லாம். மேலும் வேர் பாகங்கள் மூலம் பலனளிக்கும் கிழங்கு வகைப் பயிர்களைப் பயிரிடக் கூடாது. பச்சையாக உட்கொள்ளும் காய்கறி வகைகளைப் பயிரிடாமல் வேக வைத்துச் சாப்பிடும் வகைகளையே பயிரிடுவதும் நல்லது. கழிவுநீருடன் நல்ல நீரையும் கலந்து பாய்ச்சினால் எருச் சத்துக்கள் போதுமான அளவிற்குக் குறைக்கப்பட்டுவிடும். பயிர்களும் நன்ருக வளர்ந்து மகசூல் கொடுக்கும்.

தற்போது தீவிர விளைச்சல் திட்டத்தில் பயிர் செய்யப் பட்டுவரும் புதிய ரக நெல், சோளம், கம்பு முதலிய பயிர்களுக்கு அதிகமான எருச் சத்து தேவைப்படுகிறது. இப்பயிர்களை கழிவு நீர் பண்ணைகளில் பயிர் செய்து பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. மேலும் கழிவு நீரை நல்லமுறையில் பயிர் விளைச்சலுக்கு உபயோகிப்பதில் ஆராய்ச்சி குறைவாக இருப்பதால் இதை விரிவாக ஆராய்ச்சி செய்யவும் விவசாய ஆராய்ச்சிக்கூடம் அமைக்கும் திட்டமும் நடக்கும் ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெற்றிருக்கிறது.

பருத்திப் பயிருக்கு பயிர்பாதுகாப்பு

[திரு. **P. M.** சினிவாசன், பயிர்பாதுகாப்பு அலுவலர் அவர்களின் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ந் தேதிய உரையின் சுருக்கம்.]

அசுவிணிக்கு தடுப்பு முறை.—பாரதியான் 100 மில்லி லிட்டர் மருந்தை 200 லிட்டர் தண்ணீர் கலந்தோ அல்லது என்டிரின் 100 மி.லிட்டர் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்தோ தெளிக்க வேண்டும்.

தத்துப்பூச்சிக்கு தடுப்பு முறை.—கார்பரில் 10 சதம் தூள் எக்கருக்கு 10 கிலோ வீதம் தூவவும் அல்லது கார்பரில் 50 சதம் நீரில் கரையும் தூளை 1 கிலோவிற்கு 450 லிட்டர் தண்ணீர் வீதம் கலந்து தெளிக்கவும்.

அசுவிணி, தத்துப்பூச்சி முதலிய பூச்சிகளை ஒழிக்க மேற்கூறிய மருந்துகள் உபயோகிப்பதோடு மாலத்தியான், மெட்டாஸிஸ், டாக்ஸ், பாஸ்பாமிடான் போன்ற மருந்துகளையும் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

இலைசுருட்டும் புழுவுக்கு தடுப்பு முறை.—10 சதம் பி.எச்.சி. தூள் அல்லது 5 சதம் டி.டி.டீ. தூள் 10 கிலோ வீதம் தூவவும்.

காவடிப் புழுக்கு தடுப்பு முறை.—பி.எச்.சி. 50 சதம் நீரில் கரையும் மருந்தை 1 கிலோவிற்கு 110 லிட்டர் தண்ணீர் வீதம் கலந்து தெளிக்கவும் அல்லது டி.டி.டீ. 50 சதம் மருந்தை 1 கிலோவிற்கு 450 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

இவைகளில்லாமல் இளஞ்செடிகளைத் தாக்கும் ஈ, வண்டு, வெட்டுக்கிளி, இலைகளைப் புசிக்கும் கம்பளிப்புழு ஆகியவைகளும் பருத்திப் பயிரில் தோன்றுகின்றன. இவற்றை ஒழிக்க பி.எச்.சி. அல்லது டி.டி.டீ. மருந்தைத் தூவலாம் அல்லது நீரில் கலந்து தெளிக்கலாம்.

காய்ப்புழுக்கள்—இவைகளில் கீழ்க்கண்ட மூன்று வகைப் புழுக்கள் உள்ளன:—

1. புள்ளிக் காய்ப் புழுக்கள்.
2. சிவப்புக்காய்ப் புழுக்கள்.
3. கடலைப்புழு.

கூடலைப் புழுக்கு தடுப்பு முறை.—காய்ப்புழுக்களை ஒழிப்பதற்கு பயிரில் பூ மொட்டுகள் உற்பத்தியாகும் பருவம் தொடங்கி 2 வாரங்களுக்கு ஒருமுறை கீழ்க்கண்ட மருந்துகள் தெளிக்கலாம்.

1. கார்பரில் 0·1 சதமும், என்டிரின் 0·02 சதமும் இரண்டையும் மாற்றி மாற்றி ஒவ்வொன்றினையும் 4 முறைகள் தெளிக்கவும் (மொத்தம் 8 முறைகள்)

அல்லது

2. பி.எச்.சி. 10 சதம் (6 கிலோ), டி. டி. டீ. 5 சதம் (6 கிலோ), கந்தகத்தூள் (3 கிலோ) இவைகளைக் கலந்து தூவவும்.

3. கார்பரில் 0·1 சதம், பாரதியான் 0·025 சதம் இரண்டினையும் மாற்றி ஒவ்வொன்றினையும் நான்கு முறைகள் (மொத்தம் 8 முறைகள்) தெளிக்கவும்.

இதில் முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவென்றால் என்டிரின், கார்பரில், டயல்டிரின் டி.டி.டீ. போன்ற மருந்துகளை பலமுறை உபயோகிப்பதனால் சிவப்பு உண்ணிகள் அதிகமாக உற்பத்தியாகக் கூடும். அதைத் தடுப்பதற்கு நீரில் கரையும் கந்தகம் 1 கிலோ 500 லிட்டர் தண்ணீரில் அல்லது மெட்டாஸிஸ்டாக்ஸ் 0·1 சதம் மருந்தை எக்கருக்கு 450 லிட்டர் வீதம் தெளிக்கவும்.

தண்டு துளைக்கும் மூக்குவண்டு.—டயல்டரின் 0·1 சதம் மருந்தை செடிகளின் அடிப்பாகங்களில் எக்கருக்கு 450 லிட்டர் வீதம் 4 அல்லது 5 முறைகள் இரண்டு வாரத்திற்கு ஒரு முறை தெளிக்கவேண்டும்

அல்லது

ஹெப்டக்ளோர் 3 சதம் அல்லது பி.எச்.சி. 10 சதம் தூளை விதைகளை விதைப்பதற்கு முன் பூமியில் ஒரு எக்கருக்கு 10 கிலோ வீதம் கலந்து இதனை கட்டுப்படுத்தலாம்.

ரசாயன மருந்துகளினால் இந்த வண்டை ஒழிப்பது என்பது மிகவும் சிரமம். ஆகவே புழு அடித்த செடிகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தி அழித்துவிடவேண்டும்.

நாவாய்ப் பூச்சிகள்.—எட்டு கிலோ கார்பரில் பத்து சதம் தூளுடன் 2 கிலோ கந்தகத்தூள் வீதம் கலந்து எக்கருக்கு 10 கிலோ மருந்து தூவவேண்டும். இந்தக் கலவை மருந்தை காய்கள் தோன்றிய பருவம் முதல் முற்றும் வரை 4 முறைகள் தூவி ஒழிக்கலாம்.

மாவுப் பூச்சிகள்.—மாலத்தியான் 0·1 சதம் அல்லது மெட்டாஸிஸ்டாக்ஸ் 0·1 சதம் மருந்தை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

நோய்கள்

1. கரும்புள்ளி நோய்—தடுப்பு முறை.—இந்த வியாதி பருத்தி விதை மூலமாகவும், பிறகு காற்று மூலமாகவும் பரவுகிறது. விதைமூலம் பரவுவதைத் தடைசெய்ய அக்ரசான் அல்லது செரசான் போன்ற மருந்துகளை ஒரு ஏக்கருக்குத் தேவையான 9 கிலோ விதைக்கு 30 கிராம் மருந்து வீதத்தில் கலக்கவேண்டும். வளரும் செடிகளில் காற்றின் மூலம் பரவும் நோயைத் தடுக்க ஒரு சதவீத போர்டோ மிக்சர் மருந்தை தெளிக்கவும்.

2. இலை சிறுக்கும் வைரஸ் நோய்—தடுப்பு முறை.—இந்நோய்ப்பட்ட செடிகளைக் களைந்து அப்புறப்படுத்துவதை தவிர இந்த நோயைத் தடுக்கக்கூடிய நல்ல வழி வேறு கிடையாது.

3. பருத்தி வேர் அழுகல் நோய்—தடுப்பு முறை.—இந்த நோய் பரவக்கூடிய சூழ்நிலையை நீக்கியும் போதிய தழையுரமிட்டு நிலவளத்தை பெருக்கியும் இதை தடுக்கலாம்.

விவசாயிகளுக்கும் விவசாயப் பெண்களுக்கும் பயிற்சி அளித்தல்.

[திரு. இ. ஜி. சிவசாமி, விவசாயக் கூட்டு நெறியாளர் அவர்கள், 23—9—66 அன்று ஆற்றிய உரையின் சுருக்கம்.]

நாற்று விடுதல், உரமிடுதல், பயிர்ப் பாதுகாப்பு போன்ற பொதுவான காரியங்களை விஞ்ஞான முறையில் செய்வது எப்படி என்று போதிப்பது பயிற்சி திட்டத்தில் முதற்படியாகும். முன்னேற்ற விவசாயம் செய்துவரும் ஒரு விவசாயியின் பண்ணையில், இந்த பயிற்சி ஒழுங்கு செய்யப்படுகிறது அக்கம்பக்கத்திலுள்ள 4—5 கிராமங்களிலிருந்து விவசாயிகள் நடந்து வந்தே இப் பயிற்சியில் கலந்து கொள்ள முடியும். சாதாரணமாக 15 பேர்களுக்கு மேல் ஒரு பயிற்சி முகாமில் இருக்காது. விவசாயிகளின் சௌகர்யம், பாடதிட்டம் முதலியவற்றைப் பொருத்து மூன்று நாட்கள்வரை பயிற்சி நீடிக்கும்.

பயிற்சி பெற வந்துள்ள விவசாயிகள் தங்கள் தங்கள் சொந்த பண்ணைகளில் தோன்றிய பிரச்சினைகளைப் பற்றி எடுத்துக்கூற உற்சாகமூட்டப்படுவார்கள். இந்த பிரச்சினைகளை அங்கு கூடியிருக்கும் விவசாயிகளும், விஸ்தரிப்பு அலுவலர்களும் விவாதித்து அவைகளுக்கு ஒரு தீர்வு காணுவார்கள். இவ்வகையில்தான் விவசாயிகள் புதிய புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியும். இவ்வாறு பயிற்சி பெற்ற விவசாயிகள், கிராமங்களிலுள்ள மற்ற விவசாயிகளுக்கு தாங்கள் அனுபோக ரீதியாகப் பெற்ற விஞ்ஞான முறை விவசாய அறிவை வெகு சீக்கிரத்தில் அளிக்க முடிகிறது.

நடப்பு ஆண்டிலேயே தீவிர விவசாயப் பகுதி மாவட்டங்களாகிய செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி கோயம்புத்தூரில் சுமார் 6000 விவசாயிகள் தேர்ந்தெடுத்து பயிற்சி கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தேர்ந்தெடுத்த விவசாயிகளுக்கு விசேஷப் பயிற்சி—ஏற்கனவே திருந்திய முறைகளை அனுசரித்து சாகுபடி செய்து வரும் விவசாயிகளுக்கு விவசாயக் கல்லூரிகள், அரசினர் பண்ணைகள், விவசாயப் பயிற்சி பள்ளிகள் போன்ற நிறுவனங்களில் சுமார் 10—15 நாட்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படும் இங்கேயும், குறிப்பிட்ட பாட திட்டம் ஒன்றும் கிடையாது. பயிர் வகைகள் சாகுபடி, காய்கறி பயிரிடுதல், மண்வளப் பாதுகாப்பு, பாசனநீரை சிக்கனமாக உபயோகித்தல் இவைபோன்ற விவசாய விஷயங்களில் எவைகளைப் பற்றி பயிற்சியாளர்கள் இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்களோ அவைகளைப் பற்றியே விவசாய நிபுணர்களால் சொல்லித் தரப்படும். திருந்திய முறை வேளாண்மையில் போதிய பண்ணை அனுபவம் பெறவும் நல்ல வாய்ப்பு இருக்கிறது. வயல் நிரூபணங்கள் மூலம் கற்றுக்கொள்ளுதல் இப் பயிற்சியின் ஓர் சிறப்பு அம்சம்.

பயிற்சியாளர்களுக்கு தங்குவதற்கு வசதி செய்து தருவதுடன் உணவுச் செலவுக்காகவும் பிரயாணச் செலவுக்காகவும் அரசினர் ஓர் தொகையை அளிக்கும்.

விவசாய உற்பத்தியில் கிராமப் பெண்களுக்குப் பயிற்சி அளித்தல்.—பண்ணை பராமரிப்பிலும் வேலைகளிலும் ஆண்களோடு பெண்களும் "சரிநிகர் சமானமாக" உழைத்து வருகிறார்கள். விவசாயத்தில் நேரடித் தொடர்பும் அக்கரையும் கொண்டுள்ள பெண்களுக்கும் நவீன முறை விவசாயத்திலும், போஷாக்கு பொருள் பற்றியும், அவர்களின் தேவைகளுக்குத் தக்கபடி 2—3 நாட்களுக்குப் பயிற்சி கொடுப்பதே பெண்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின் முக்கிய நோக்கமாகும். இது அவர்கள் வசிக்கும் கிராமங்களிலேயோ அல்லது கிராம சேவகிகள் பயிற்சி நிலையங்களிலோ கொடுக்கப்படலாம். நமது மாநிலத்தைப் பொருத்த அளவில், இந்த திட்டத்தில் பெண்கள் அதிக அக்கரை இதுவரையில் காட்டவில்லை என்பது வருந்தத்தக்க விஷயமாகும். பெண்களின் விவசாயக் கல்வியில் முன்னேற்றம்காண தனிப்பட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமென்பதை நான் வலியுறுத்திச் சொல்லுகிறேன்.

அமோக விளைச்சல் திட்டத்தில் விவசாயிகளுக்கும், விவசாயப் பெண்டிருக்கும் பயிற்சியளித்தல்.—அமோக விளைச்சல் திட்டம் தமிழ்நாட்டில் இந்த வருடத்தில் ஆரம்பமாகியிருக்கிறது. இத்திட்டம் எதிர்பார்க்கும் அளவுக்கு வெற்றிபெற வேண்டுமானால் உயர்ந்த விளைச்சல் கொடுக்கும் தினுசுகளைப் பயிரிடுவதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கும் விவசாயிகளுக்கும் விவசாயப் பெண்டிருக்கும் மிகச் சிறந்த முறையில் விஞ்ஞான முறையில், திருந்திய விவசாயம் குறித்து விசேஷ பயிற்சி கொடுத்தல் மிகமிக அவசியம். இதற்கான ஓர் தனிப் பயிற்சி திட்டம் நம் மாநிலத்தில் செயல்படவிருக்கிறது.

நாம் அமோக விளைச்சல் பெற தெரிந்தெடுக்கப்பட்டுள்ள விவசாயிகள் இப்பயிற்சியில் நல்ல ஊக்கமும் அக்கரையும் காட்டவேண்டும்.

மேற்கூறிய பயிற்சி திட்டங்கள் எல்லாம் மிகக் குறுகிய காலத்தில் அதிக விளைச்சல் நிலையை அடையும் ஓர் விவசாயப் புரட்சியை உருவாக்க வேண்டுமென்றும் ஓர் உயர்ந்த நோக்கம் கொண்டதாகும். விவசாயத்தில் நம்முடைய பழைய முறைகள் மாறி புதிய கருத்துக்கள் தோன்றவேண்டும்.

கிராம வானொலி மன்ற நிகழ்ச்சியில் இந்த மாதத்தில் பேசுவோர்.

பொருள்.	பேசுவோர்.
4—11—66	
உணவு நெருக்கடியைத் தீர்க்க கடற்கரை மணலை நாடலாமே.	திரு. எம். ஆர். பால கிருஷ்ணன், Retd. E.A.O. Expert, நெ. 7, சித்தரஞ்சன் ரோடு, சென்னை–18.
11—11—66	
திருந்திய முறைகள் கரும்பின் தரத்தையும் மகசூலையும் உயர்த்தும்.	திரு. பி. கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட வேளாண்மை அலுவலர், வேலூர்.
18—11—66	
கரிசல் நிலங்களில் கொத்த மல்லி ஒரு லாபகரமான பயிர்.	திரு. வி. சீனிவாசன், சர்வே அலுவலர், விவசாயக் கல்லூரி, கோவை.
25—11—66	
உங்கள் நிலத்திற்கேற்ற பசுந்தாளுரப் பயிர்.	திரு. ஜி. முருகேசன் துணை வேளாண்மை நெறியாளர், மதுரை.

கழிவும் வளமும்.

நம் நாட்டில் உள்ள நகரங்களிலிருந்து வெளியேற்றப் படும் கழிவு நீர் கூறும் உண்மைகளைக் கேளுங்கள்.

இந்தியாவில் கிட்டத்தட்ட 80 மாநகரங்களில் பாதாள கழிவுநீர் கால்வாய் முறையும் 600 நகரங்களில் திறந்த கழிவு நீர்க் கால்வாய் முறையும் கையாளப்படுகின்றன. இவைகளில் இருந்து வெளியேறும் கழிவுநீரின் மொத்த அளவு நாள் ஒன்றுக்கு 700 மிலியன் காலன், இதில் உள்ள தாவர உரச்சத்துக்கள் நாள் ஒன்றுக்கு 80 டன் நைட்ரஜன் 16 டன் பாஸ்பாரிக் ஆசிட், 48 டன் பொட்டாஷ், 1,280 டன் கரிமச்சத்து.

இந்த 700 மிலியன் காலன் தண்ணீர் இரண்டு லட்சத்து பத்தாயிரம் ஏக்கர் நிலத்திற்கு பாயும். இதிலிருந்து 3 லட்சம் டன் உணவு தானியங்களை விளைவிக்கலாம்.

முயற்சி தேவை, வளமான கழிவுநீரை உற்பத்திக்குப் பயன்படுத்த வேண்டியது நம் கடமை.

(தகவல் : திரு. பினுகபாணி)

விமான மூலம் மருந்தடிப்பு

தென்னாற்காடு மாவட்டத்தில் திண்டிவனம் தாலுக்காவில் மைலம், ஒலக்கூர் வட்டாரப் பகுதிகளில் நிலக் கடலையைத் தாக்கும் சிகப்புக் கம்பளிப்பூச்சியை ஒழிப்பதற்காக விமானம் மூலம் மருந்து தெளிக்கப்பட்டது. தமிழ்நாடு தகவல், செய்தி அமைச்சர் திரு கோ. பூவ ராகன் அவர்கள் ஆகஸ்ட் மாதம் 26-ம் தேதி மருந்து தெளிப்பதை துவக்கி வைத்தார். அவ்வமயம் ரஷ்யப்பிரதிநிதி திரு ஜி. ஐ. கோவரின் அவர்களும் இந்த வைபவத்தில கலந்துகொண்டார். இந்த முறைரஷ்ய விமானத்தின் மூலம், ரஷ்ய விமானிகளாலேயே மருந்து அடிக்கப்பட்டது.

விமான தள வேலைகள், பராமரிப்பு, மருந்து கலந்து விமான டாங்கிகளில் நிரப்புதல், விமானம் மருந்து தெளிக்கவேண்டிய இடத்தை கொடிகள் பிடித்துக் காட்டுதல் போன்ற பலவித வேலைகள் விழுப்புரம் மாவட்ட விவசாய அதிகாரி மேற்பார்வையில் செய்யப் பட்டது. மேற்சொன்ன இரண்டு வட்டாரப் பகுதிகளில் சுமார் 18,000 ஏக்கர் பரப்பளவில் நிலக்கடலைக்கு மருந்து அடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

படங்கள் : பின அட்டை, வெளிப்பக்கம்.

கலப்புப் பண்ணைத் திட்டம்

கால்நடைப் பராமரிப்புத்துறை

நம்நாட்டில் பெருவாரியான மக்கள் விவசாயத்தை நம்பியே வாழ்கிறார்கள். நம்நாட்டு விவசாயிகளில் பெரும்பான்மையோர் குறைந்த விஸ்தீரணமுள்ள பூமியில் விவசாயம் செய்து பிழைப்பவர்களாக உள்ளனர். அதிகமான குடியானவர்கள் ஐந்து எக்கருக்கு உட்பட்ட சிறு நிலச்சுவான்தாரராகவே உள்ளனர். அவர்கள் தங்கள் நிலத்தில் வசதிக்கேற்ப உணவு தானியங்களையோ அல்லது பணப் பயிர்களையோ பயிர்செய்து வாழ்கிறார்கள். தங்கள் விவசாயத்துக்குத் தேவையான எருதுகளை மட்டுமே பராமரித்து வருகிறார்கள்.

தானியங்களைப் பயிரிடுவதோடு தீவனப் பயிரையும், பயிர் செய்துகொண்டு பயன்தரும் கால்நடைகளையும் பராமரித்து வந்தால் அது விவசாயிகளுக்கு அதிகமான பொருள் கொடுப்பதோடல்லாமல் நிலத்துக்கு வேண்டிய சிறந்த உரமும், மாட்டுச் சாணத்தின் மூலம் கிடைக்கச் செய்கிறது.

தற்போது விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு தானியம் பயிரிடுவதினின்றும் கிடைக்கும் வைக்கோல், தட்டை போன்றவைகளையே தீவனமாக உபயோகிக்கிறார்கள். அவை போதிய சத்துள்ளவை அல்ல—ஆகையால்தான் அவர்களுடைய கால்நடைகளும் அதிகப்பாலைக் கொடுப்பவையாக இல்லை.

அதிகப்பால் கொடுக்கும் கறவை மாடுகள், விலை அதிகமாக இருப்பதாலும், அவற்றிற்கான போஷாக்கான தீவனம் பயிரிடப்படாததாலும், விவசாயிகளின் வருமானம் குறைவானதாகவே இருக்கின்றது.

கலப்புப் பண்ணைத் திட்டம்

மேற்கண்ட குறையைப் போக்கி விவசாயிகளின் வருமானத்தை அதிகப்படுத்துவதற்காக "கலப்புப் பண்ணைத் திட்டம்" செயல்படுகிறது. முதன் முதலில் முன்னோடித் திட்டமாக தீவிர விவசாயச் சாகுபடி மாவட்டமான தஞ்சாவூரில் 24 சிறு கலப்புப் பண்ணைகள் ஏற்படுத்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

கலப்புப் பண்ணைத் திட்டத்தில் உள்ள வாய்ப்புகள்

கலப்புப் பண்ணைத் திட்டத்தின் மூலம் (1-லிருந்து 5 எக்கர் பாசன வசதியுள்ள நிலத்தைப் பெற்றுள்ள விவசாயிகளுக்கு ஒரு ஜோடி எருதுகள் வாங்குவதற்கு ரூ. 500-ம், 1 பசுவிற்கு ரூ. 500 வீதம் இரண்டு நல்ல கறவை மாடுகள் வைத்துக்கொள்வதற்கு ரூ. 1,000-மும் ஆக மொத்தம் ரூ. 1,500 கடனாக வழங்குகிறது. (2) விவசாயிகள் தங்கள் நிலத்திலேயே மாட்டுத் தீவனப் பயிர்கள் பயிர்செய்ய வசதியளிக்கப்படுகிறது. குதிரை மசால் (Lucerne) போன்ற பயிர்கள் மாடுகளுக்குச் சிறந்த போஷாக்கைத் தருவதுடன், மண்வளத்தையும் அதிகரிக்கச் செய்கின்றன. (3) தீவனத்துக்கும் அதே சமயம் மண்வளத்துக்கும் பயன்படக்கூடிய தீவனப் புல் பயிர்களை உற்பத்தி செய்ய ஒரு எக்கருக்கு ரூ. 100 மான்யம் கொடுக்கப்படுகிறது. (4) உணவு தான்யப் பயிருடன் தீவனப் பயிர்களையும் உற்பத்தி செய்யத் தேவைப்படுகிற "நைட்ரேட்" "பாஸ்பேட்" உரவகைகளுக்கும் தனித் தனியே மான்யம் அளிக்கப்படுகிறது.

கலப்புப் பண்ணைத் திட்டத்தால் விளைந்த பயன்கள்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முன்னோடித் திட்டமாகத் துவக்கப்பட்டுள்ள கலப்பு பண்ணைத் திட்டத்தின் மூலம் தஞ்சை மாவட்டத்தில் தஞ்சாவூர், பூதலூர் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த வல்லம், செங்கிப்பட்டி வட்டாரங்களில் உள்ள கிராமங்களில் 24 விவசாயிகளுக்குத் தலா ரூபாய் 1,500 (ஆயிரத்து ஐந்நூறு) கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் ஒவ்வொருவரும் இரண்டு நல்ல கறவை மாடுகளும், ஒரு ஜோடி காளைமாடுகளும் வாங்கிப் பராமரித்து வருகிறார்கள். தீவனப் பயிர் முறையும் செயல்பட்டு வருகின்றது. இந்தக் கடன் வசதி மூலம் மேற்படி 24 சிறு கலப்புப் பண்ணைகளிலிருந்து ஒரு நாளைக்குச் சுமார் 250 லிட்டருக்குக் குறையாமல் பால் உற்பத்தியாகின்றது. விவசாயிகள் தங்கள் தேவைக்குப் போகத் தினந்தோறும் 200 லிட்டர் பால் விற்பனை செய்து வருகிறார்கள். பால் விற்பனை

[30-ம் பக்கம் பார்க்கவும்.]

தமிழ்நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத் திட்டங்கள்

அ. ஆணை. 2064/66—26—8—66

தமிழ் நாட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் பஞ்சாயத்து யூனியன்களில் செயல் படுத்த வேண்டிய விவசாயத் திட்டங்கள் பற்றி அரசினர் ஆணை பிறப்பித்துள்ளனர். கிராம நல நிர்வாகத்து றையின் 26-8-66ந் தேதிய ஆணை எண் 2064. நடைமுறை கோட்பாடுகள், விளக்கங்கள் பற்றிய அடிப்படை அறிவுரைகள் கொண்ட இந்த ஆணை பஞ்சாயத்து யூனியன்கள், மாவட்ட அலுவலங்களில் பணிபுரியும் யாவர்க்கும் மிகவும் பயனுடையது. அவர்களின் உதவிக்காக முக்கிய மாக வேண்டிய பகுதிகள் மட்டும் அப்படியே இங்கு பிரசுரிக்கப்படுகின்றன.

இந்த ஆணையின் தமிழாக்கம் 1966 அக்டோபர் மாத 'கிராமநலம்' பத்திரிகையில் முழுமையாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்திற்கு முக்கிய முதன்மையளித்து, விவசாய உற்பத்தியைப் பெருக்குவது மக்களின் பொறுப்பாகும். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்குள்ள மிக முக்கியமான பொறுப்புக்களில், உணவு உற்பத்தியைப் பெருக்குவதும் ஒன்றுகுமென 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் பீடிகை வலியுறுத் திக் கூறுகிறது. தமிழ்நாடு பஞ்சாயத்துக்கள் சட்டத்தி லுள்ள 65-வது பிரிவின்படி, அதனுடைய பிரதேசத் தில், விவசாய வளர்ச்சியைக் கவனிப்பது, பஞ்சாயத்து யூனியனின் பொறுப்பேயாகும்.

(2) உள்ளூர் நிலைமைகளுக்கு எற்ற வேலைத் திட் டங்களை உருவாக்கவும், நான்காவது திட்டத்தை தயாரிப் பதிலேயே பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் ஈடுபடுத் தப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும், உற்பத்தித் திட்டங்களைத் தயாரித்து, அவற்றை அரசாங்கத்தின் பரிசீலனைக்காகவும், அவற்றின்பேரில் உத்தரவுகள் பிறப்பிப்பதற்காகவும், அரசாங்கத்திற்கு அனுப்பி வைக் கும்படி கிராம நல நிர்வாகத் துறையின் 1965-ம் வருடம் செப்டம்பர் மாதம் 17-ம் தேதியிட்ட அரசாங்கக் குறிப் பாணை எண் 158605-ல் பஞ்சாயத்து யூனியன் மன்றங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டன.

(3) பஞ்சாயத்து யூனியன்களால் அனுப்பி வைக்கப்பட்ட உற்பத்தித் திட்டங்களெல்லாம், கிராம வளர்ச்சி நெறி யாளர், விவசாய நெறியாளர், விலங்கின வளர்ச்சி நெறியாளர், மற்றும் மீனளத்துறை நெறியாளர் ஆகியோருடன் கலந்து விரிவாகப் பரிசீலனை செய்யப் பட்டன. இந்த பரிசீலனையின் விளைவாக, நான்காவது திட்டக்காலத்தில், விவசாய மானியத்தைக் கொண்டு நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களெல்லாம், இவ் வாணையின் இணைப்பு 1-ல் உள்ளவாறு இருக்க வேண்டு மென்று, அரசாங்கம் இப்போது ஆணை பிறப்பிக்கிறது.

(4) இணைப்பு I-ல், விவசாய அபிவிருத்தி, விலங் கின வளர்ச்சிப்பற்றிய திட்டங்களெல்லாம் இருவகையா கப் பிரிக்கப்பட்டுள்ளது: அவை "இன்றியமையாத் திட்டங் கள்" (Essential), "விருப்பத் திட்டங்கள்" (Optional) என இருவகையாகும். சில திட்டங்களை நிறைவேற்றும் வேலை பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன; வேறு சில, மூன்றுவது திட்டத்திலிருந்தது போன்றே பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைக்கப் படுகின்றன. பெருவாரியான பஞ்சாயத்து யூனியன்களால் கொண்டு வரப்பட்டுள்ள திட்டங்களில், எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்தப்படக் கூடியவைகளும், உற்பத்தியைப் பெருக்குவதற்கு மிக அவசியம் எனக் கருதப்படுகிற திட்டங்களும், "இன்றியமையாத்" திட்டங்களின் வரிசையில் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே இத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள செலவினங்களின் உச்ச வரம்புகளை குறைக்காமலும், அவற்றில் எது ஒன்றையேனும் விட்டுவிடாமலும், அத் திட்டங்களையெல் லாம் பஞ்சாயத்து யூனியன்கள் நிறைவேற்ற வேண்டும். இருப்பினும், "கிராம சகாயக்", "உள்ளூர் உர ஆதார அபிவிருத்தி செய்தல்—பசுந்தாள் உர விதைகள் வழங்குதல்" ஆகிய இரு திட்டங்களிலும், உள்ளூர் தேவைகளை அனுசரித்து, மாவட்ட விவசாய அதிகாரி மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசித்த பின் உச்ச வரம்பைக் குறைத்துக்கொள்ளலாம்.

(5) பெருவாரியான அளவில் செயல்படுத்த முடியாத திட்டங்களெல்லாம் "விருப்பத்" திட்டங்களாகும்; அவற்றி லிருந்து, யூனியன்களுக்கு தேவையான திட்டங்களை பஞ்சாயத்து யூனியன்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ள லாம். இவ்வகையில் ஒவ்வொரு திட்டத்திற்கும் நிர்ண யிக்கப்பட்டுள்ள செலவின உச்ச வரம்பானது, அதற்குமேல் போகாமல் சரிவர பின்பற்றப்பட வேண்டும்.

(6) இணைப்பு I-ல் குறிப்பிடப்படாமல், ஆனால் தங்கள் பகுதியின் குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் அள விற்கு, மேலும் திட்டங்களை வகுத்துக் கொள்ளும் வகையில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு வசதியளிக்க, "பிரதேசங் களுக்குரிய சிறப்புத் திட்டங்கள்" (Special Schemes Specific to the areas) என்ற தலைப்பில் ரூ. 40,000 ஒதுக்கப்பட் டுள்ளது. இத் தொகையைப் பயன்படுத்திக் கொள்வதற்கு பஞ்சாயத்து யூனியன்கள் விரிவான திட்டங்களைத் தயா ரித்து, அவற்றை மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்; அபிவிருத்தி மன்றங்கள், இக் கோரிக்கைகளை பரிசீலனை செய்து, அவற்றையெல்லாம் தொகுத்து கிராம வளர்ச்சி நெறியாளருக்கு அனுப்பி

வைக்கவேண்டும். "இன்றியமையாத் திட்டங்கள்" அல்லது "விருப்பத்" திட்டங்களில், செலவழிப்பதற்காக அவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ள உச்ச வரம்பை அதிகரித்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினாலும், அதற்காக இத்தொகையை யூனியன்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இத்திட்டங்களில் சேர்க்கப்பட்டுள்ள கட்டிட வேலைகளுக்காக இத்தொகையை உபயோகிக்கக்கூடாது. ஆனால் மாவட்ட அபிவிருத்தி மன்றங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட மட்டில், அப்படிப்பட்ட செலவினங்கள் கிராம வளர்ச்சி நெறியாளரின் முன் அனுமதியின்றி செய்யப்படக்கூடாது.

(7) இணைப்பு ஒன்றில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள வேலை திட்டங்களை நிறைவேற்றவேண்டி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிடமும், 1966-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் தொடங்குகிற ஐந்தாண்டுக் காலத்திற்கு ரூ. 2 லட்சத்தை மானியமாக வழங்கும். ஆனால், இந்த மானியத்தைப் பெற, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும் 50,000 ரூபாய்க்கு குறையாமல் ஈட்டு நன்கொடையாகத் திரட்டித்தர முன்வரவேண்டும். அதனால், நான்காவது திட்டக்காலத்தில் உற்பத்தித் திட்டங்கள் செயல்படுத்துவதற்காக வேண்டி, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கு இரண்டரை லட்சம் ரூபாய் கிடைக்க ஏதுவாகும்.

(8) இணைப்பு ஒன்றில் கண்டுள்ள பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகின்ற முறை, அளவு எல்லாம் பற்றிய விவரங்கள் இணைப்பு இரண்டில் சொல்லப்பட்டுள்ளன. பஞ்சாயத்து யூனியன், உற்பத்தித் திட்டத்தை உருவாக்கும் பொழுது, பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் அதில் சொல்லப்பட்ட விவரங்களை கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று அரசாங்கம் அந்த நிறுவனங்களுக்கு யோசனை கூறுகிறது.

(9) மூன்றாவது திட்டகாலத்தில், பஞ்சாயத்து யூனியன்களும், பஞ்சாயத்துக்களும் குறிப்பிட்டதொரு வேலைத் திட்டத்தை நிறைவேற்ற மேற்கொள்கையில், செலவில் அவர்களது பங்குத் தொகையை செலுத்திவந்தன. வேலை நிறைவேற்றப்பட்ட பிறகு அரசாங்க மானியத்தைப் பெற்று, பின்பு திரும்ப தங்கள் கணக்கில் ஈடு செய்துகொண்டன. இவ்வாறு கணக்கு வைப்பதில் சில சிக்கல்கள் ஏற்பட்டன. ஐந்தாண்டுக் கால அளவில் எவ்வளவு நன்கொடையாக கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறதோ, அந்தத் தொகையை முன்கூட்டியே பஞ்சாயத்து யூனியன்கள் செலுத்திவிடவேண்டும் என்று இப்பொழுது யோசிக்கப்பட்டுள்ளது. ஆகவே, நான்காவது திட்டத்தில் பஞ்சாயத்து உற்பத்தித் திட்டத்தின்கீழ் உள்ள பல்வேறு வேலைத் திட்டங்களைச் செயல்படுத்து வதற்காக, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனும், உற்பத்தி நிதிக்காக, உள்ளூர் நிதி டிபாசிட் I-ல் ஒவ்வொரு ஆண்டும், முன்பணமாக, பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாமல் மொத்தமாக ஒரு பங்குத் தொகையை செலுத்த வேண்டுமென அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. இந்தத் தொகையை ஒரு மொத்தமாக 10 ஆயிரம் ரூபாயாக, ஒரே தடவையில் செலுத்தலாம். அல்லது நான்கு கால் ஆண்டுத் தவணைகளாக 2,500 ரூபாய் என்ற விகிதத்தில் நான்கு தவணைகளாகவும் கட்டலாம். 1966–67-ம் ஆண்டுக்கு முதல் இரண்டு கால் ஆண்டுகளுக்கான பங்கு தொகையை 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ம் தேதி முடியும் கால் ஆண்டுக் காலத்தில் செலுத்தி விடவேண்டும். இந்தப் பங்குத் தொகையில் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்காக, பஞ்சாயத்துக்களின் பங்குத் தொகையும் அடங்கியுள்ளது. முன்பு செய்து வந்தது போலவே, அரசாங்க மானியத் தொகையை வேலையை நிறைவேற்றி முடிந்த பிறகு, பெற்றுக்கொண்டு திரும்ப தங்கள் கணக்கில் ஈடு செய்து கொள்ளவேண்டும்.

(10) கூடுதலான உற்பத்தித் திட்டங்களுக்காக வேண்டி, நான்காவது திட்டத்தில் குறைந்தபட்சமாக தேவைப்படுகிற 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலும் அந்த நிறுவனங்கள் நிதி திரட்டும் என அரசாங்கம் நம்புகிறது.

(11) பஞ்சாயத்துக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட வரையில், கிராமப் பஞ்சாயத்துக்கள் தம் பங்கினைச் செலுத்த வேண்டியுள்ள ஒரு குறிப்பிட்ட வேலைத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு அவைகளுக்கு அனுமதி அளிப்பதற்கு முன்பேயே, கிராமப் பஞ்சாயத்துக்கள் தரவேண்டியுள்ள பங்குத் தொகையை பஞ்சாயத்து யூனியன்கள் அவைகளிடமிருந்து முன் பணமாகவே வசூல் செய்து, அந்தத் தொகைகளை பஞ்சாயத்து யூனியன் கணக்குகளில் வரவு வைத்துக்கொள்ள வேண்டும்.

(12) விவசாயக் கருவிகள் வழங்குதல், பழச்செடி நாற்றுகள் அளித்தல், பொலி இனக்காளைகள் விநியோகம் போன்று குறைந்த விலையில் தனிப்பட்ட நபர்களுக்கு அளிக்கப்படும் விஷயத்தில், அதனால் பயன் பெறுவோர்களிடமிருந்து (Beneficiaries) நன்கொடைத் தொகையை முன் பணமாகவே வசூல் செய்துகொள்ள வேண்டும். இணைப்பு I-ல் குறிப்பிட்டுள்ள அளவுக்கு குறைந்த அளவிற்கான தொகையை பஞ்சாயத்து யூனியன்களோ பஞ்சாயத்துக்களோ வசூல் செய்யக்கூடாது.

(13) பொதுவாக, ஒவ்வொரு ஆண்டுக்கும் வரையறை செய்யப்படுகிற செலவினமானது, திட்டக்கால முழுமைக்கும் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீட்டில் இட்டத்தட்ட ஐந்தில் ஒரு பாகமாக இருக்கவேண்டும் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. ஆனால், அரசாங்க மானியத்தைப் பொறுத்த வரையில், மாநில வரவு செலவுத் திட்டத்தில் (State Budget) முன்பேயே நிதி வசதி செய்யப்பட்டுள்ள கீழ்க்கண்ட அம்சங்களில், தங்களுடைய செலவினங்களை, பஞ்சாயத்து யூனியன்கள் கட்டுப்படுத்தி கொள்ளவேண்டும் :—

ஒவ்வொரு யூனியனுக்கும் :

		ரூ.
விவசாயம்	..	30,200
விலங்கின வளர்ச்சி	..	6,300

(14) பல்வேறு வேலைகளுக்கான செலவுத்தொகை யானது கீழ்க்கண்ட முறையில் பற்று வைக்கப்பட வேண்டும் :—

விவசாயத் திட்டங்கள்

முதல் நிலை—இரண்டாம் நிலை வட்டாரங்கள்.	இரண்டாம் நிலைக்குப் பிந்திய வட்டாரங்கள்.
31. விவசாயம்-ஓ-அபிவிருத்தித் திட்டங்கள்–II –நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்கள்–எஸ்–பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியங்கள். (முதல்நிலையும், இரண்டாம் நிலையும்)	31. விவசாயம்–ஓ-அபிவிருத்தித் திட்டங்கள்–II. நானகாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டம்–டி. பஞ்சாயத்து யூனியன்களுக்கு மானியங்கள். (இரண்டாம் நிலைக்குப் பிந்திய வட்டாரங்கள்)
(i) இன்றியமையாத் திட்டங்கள்.	(i) இன்றியமையாத திட்டகள்.
(ii) விருப்பத் திட்டங்கள்.	(ii) விருப்பத் திட்டங்கள்.

விலங்கின வளர்ச்சியின்கீழ் வருகிற திட்டங்கள்

முதல் நிலை—இரண்டாம் நிலை வட்டாரங்கள்.	இரண்டாம் நிலைக்குப் பிந்திய வட்டாரங்கள்.
37. சமுதாய அபிவிருத்தித் திட்டம், தேசிய வளர்ச்சிப்பணி, உள்ளூர் அபிவிருத்தி வேலைகள்–II–அபிவிருத்தித் திட்டங்கள்–(ii) நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்கள்–(பி) விலங்கின வளர்ச்சி–3–பஞ்சாயத்து யூனியன்களுக்கு உதவி மானியம்.	33. விலங்கின வளர்ச்சி–எச். அபிவிருததி வேலைகள்–II–நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டங்கள்–Z– இரண்டாம் நிலைக்குப் பிந்திய வட்டாரங்களுக்கு பஞ்சாயத்து யூனியன்களுக்குமானியங்கள்.
(i) இன்றியமையாத் திட்டங்கள்.	(i) இன்றியமையாத திட்டங்கள்.
(ii) விருப்பத் திட்டங்கள்.	(ii) விருப்பத்திட்டங்கள்.

இன்றியமையாத் திட்டங்கள் இந்த ஆணையின் இணைப்பு I-ன் (அ) பகுதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. விருப்பத் திட்டங்கள் (பி) பகுதியில் குறிக்கப்பட்டுள்ளன.

(15) எல்லா பஞ்சாயத்து அபிவிருத்தி வட்டாரங்களிலும், 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1-ம் தேதி முதல் இந்த உத்தரவு அமுலுக்கு வரும் என அரசாங்கம் ஆணை பிறப்பிக்கிறது. உற்பத்தித் திட்டங்கள் பற்றி 1966-ம் ஆண்டு மே மாதம் 7-ம் தேதியிட்ட கிராம நல-தல நிர்வாகத்துறையின் அரசாங்க ஆணை எண் 1180-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை ரத்து செய்து, அவற்றிற்குப் பதிலாக இந்த ஆணை அமுலுக்கு வரும்.

WATER DIVINER

தண்ணீர் ஊற்றுகள் கண்டுபிடிப்பதில் 30 வருட
அனுபவம் பெற்ற நிபுணர்

மேன்மை தங்கிய சென்னை கவர்னர், திருவிதாங்கூர் மஹாராஜா, தென் பிராந்திய மிலிடரி தளபதி, P.W.D., C.P.W.D., முற்போக்குள்ள பல தொழிலதிபர்கள், விவசாயிகள், பிரபல எஸ்டேட்டுகள் மற்றும் பலராலும் ஆதரிக்கப் பெற்றவர். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றவர்.

கிணறுகள் வெட்ட ஊற்றுள்ள பாறையற்ற இடங்களாக கண்டுபிடித்துக் கொடுக்கப்படும்.

பழைய கிணற்றை அடிவெட்டு வெட்டினுல் அல்லது போரிங் போட்டால் பிரயோஜனப்படுமா என்பதையும் பரிசோதிக்கப்படும்.

தயவுசெய்து எழுதுங்கள் :

N. சாம்பசிவன்,
வாட்டர் டிவைனர்,
'ஸ்ரீ ரமண வில்லா', நெ. 41, கச்சேரி ரோடு,
மைலாப்பூர், மதராஸ்-4.

டெலிபோன் : 7 3 7 6 2

இணைப்பு I

விவசாயம், விலங்கின வளர்ச்சி, மீனளம் ஆகியவற்றின் அபிவிருத்தி பற்றி பஞ்சாயத்து யூனியன்களின் வேலைத் திட்டம்

ஒத்துக்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள்—அவற்றின் நிதி ஒதுக்கீடுகளுடன்.

வரிசை எண்ணும் திட்டத்தின் விவரமும். (1)	அரசாங்க மானியம். (2)	செலவுக்கு வரையறை (அரசாங்கமானியமும், பஞ்சாயத்து யூனியன் பஞ்சாயத்துக்களின் பங்குத் தொகையும் சேர்த்து.) (3)	குறிப்புகள். (4)
அ. இன்றியமையாத் திட்டங்கள் (Essential Schemes)			
	ரூ.	ரூ.	
1. பஞ்சாயத்துத் தோட்டங்களை ஏற்படுத்துதலும், பராமரித்தலும்.	20,000	30,000	கிராமப் பஞ்சாயத்துக்களால் செய்யப்பட வேண்டியவை. செலவில் மூன்றில் ஒரு பங்கை, அவை தங்கள் நிதிகளிலிருந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.
2. விவசாய டிப்போக்கள், கிடங்குகள் கட்டுதல்.	20,000	20,000	முழுமையும் மானியமாகவே அளிக்கப்படுகிறது. (விவரங்களுக்கு இணைப்பு II பார்க்கவும்.)
3. கிராம சகாயக் பணி.	30,000	30,000	ஒரு குவிண்டால் பொறுக்கு விதைகள் விநியோகிக்க ரூ. 5 என்று அளவில் கிராம சகாயக்குகளுக்கு நிதி உதவி வழங்குவதற்காக கிராம சகாயக் திட்டத்தை செயல்படுத்த எவ்வளவு தொகை உண்மையாக தேவைப்படுகிறதோ, அந்தத் தொகைக்குதான் வசதி செய்யப்பட வேண்டும்.
4. உள்ளூர் எரு ஆதாரங்களை அபிவிருத்தி செய்தல், தனிப்பட்ட நபர்களுக்கு பசுந்தாள் உர விதைகள் வழங்கல்.	3,000	3,000	15 சத விகித குறைந்த விலையில் பசுந்தாள் உர விதைகள் விநியோகம் செய்யப்பட வேண்டும். இதற்கு உண்மையாக எவ்வளவு தேவைப்படுமோ அந்த நிதி அளவு என்ன வென்று பார்க்க வேண்டும். அதே சமயத்தில், அந்தப் பிரதேசத்தில் பசுந்தாள் உர அபிவிருத்திக்கான சாதகக்கூறுகள் உண்டா என்பதும் பார்க்கப்பட வேண்டும்.
5. தனிப்பட்டவர்களுக்கு விவசாயக் கருவிகள் வழங்கல்.	7,500	7,500	பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்களையும், தரமான கருவிகளையும் 50 சதவிகித குறைந்த விலையில் வழங்குதல்.
6. காய்கறிச் செடிகள், நாற்றுகள், பழச்செடிகள் கொண்ட நாற்றங்கால் விதைப் பண்ணைகள்.	2,500	2,500	கிராம சேவக்குகள் இப்படிப்பட்ட காய்கறி விதைப் பண்ணைகளை ஏற்படுத்தவும், விதைகளை இனமாக வழங்கவும், முழுமானியம் அளிக்கப்படுகிறது.
7. விவசாய வளர்ச்சி பற்றிய செய்முறை விளக்கப் பண்ணைகள்.	15,000	15,000	நெல், சோளம், வேர்க்கடலை பற்றி செய்முறை விளக்கப் பண்ணைகள் நிறுவ வேண்டும். விவசாயிகளுக்கு இணைப்பு II-ல் கண்டுள்ளபடி உதவி அளிக்கப்பட வேண்டும்.
8. விலங்கின மருந்தகங்கள் கட்டுதல்.—			
(அ) புதிதாக கட்டப்படுபவை	30,000	40,000	விவரங்களுக்கு இணைப்பு II பார்க்கவும்.
(ஆ) பழையவற்றை அபிவிருத்தி செய்தல்—			
(1) முதல் கட்டம்	10 000	10,000	
(2) இரண்டாவது கட்டம் ..	10,000	10,000	
மொத்தம் ..	1,48,000	1,68,000	

(தொடரும்)

1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திய காலநிலை அறிக்கை.

(சி. பாலசுப்ரமணியன், ரா. ஜானகிராமன், விவசாய காலநிலை ஆராய்ச்சிப் பிரிவு, கோவை.)

இம்மாதம் மழையே இல்லாத நாட்கள் 1, 2, 8 தேதிகளாகும். ஏதோ ஒன்று இரண்டு இடங்களில் மாத்திரம் சிறு தூறல் உள்ள நாட்கள் 3, 7, 9, 12, 13, 15, 17, 19, 25, 27. 30 தேதிகள். 4, 5, 6, 10, 11, 14, 16, 18, 20, 21, 22, 24, 26, 29 தேதிகளில் சில இடங்களில் மாத்திரம் தூறலும், 23, 28, 31 தேதிகளில் அநேக இடங்களில் பரவலான மழையும் இருந்தது.

காலநிலையும் பயிர் வளர்ச்சியும்.

இம்மாதம் எல்லா மாவட்டங்களிலும் சில பகுதிகள் நீங்கலாக மற்ற இடங்களிற் மழை யிருந்தது. செங்கற்பட்டு மாவட்டத்தில் இம்மழையால் மானவாரி வேர்கடலை மிகுந்த பயனடைந்தது. பூமியை உழுது பண்படுத்தவும், நெல் நாற்றுவிடுதனுக்கும் (semi dry paddy varities) இம்மழை உதவிற்று. நெல்லில் துளைப்பான்களும், வேர்கடலையில் சுருள்பூச்சியும், கம்பளிப்பூச்சியும் ஏற்பட்டு தகுந்த முறைகள் கொண்டு தவிர்க்கப்பட்டன.

தென்னாற்காடு மாவட்டத்தில் நல்ல மழையிருந்தது. மப்பு மந்தாரமான சூழ்நிலை கம்பின் தானிய முதிர்ச்சியை கொஞ்சம் பாதித்தது. வேர்க்கடலை. சோளம், கம்பு, வரகு முதலிய பயிர்களில் களை எடுக்கப்பட்டது. வேர்க்கடலையில் சுருள்பூச்சியும், வேரழுகல் நோயும் ஏற்பட்டு தகுந்த முறைகளால் தவிர்க்கப்பட்டன. தஞ்சை மாவட்டத்திலும் நல்ல மழையிருந்தது. இது குறுவை நெல்லுக்கு நல்ல பலனளித்தது. சம்பா நாற்றுவிடுதலுக்கும், நாற்றங்காலுக்கும் அதிக மழை கொஞ்சம் பிரதிகூலமாக இருந்தது. குறுவையில் சிறிது இலைப்புள்ளி நோயும், பேனும், துளைப்பானும் ஏற்படவே உடனடியாகத் தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன.

சேலம் மாவட்டத்தில் பெய்த மழை போதிய அளவில் இல்லாவிட்டாலும் இது மிகுந்த நன்மையையளித்தது. பூமியை உழுதுவைப்பதற்கும் கம்பு, வேற்கடலை, பருத்தி அடைசோளம் விதைப்பதற்கும், சம்பா நாற்று நடவிற்கும் இம்மழை பெருமளவு உதவிற்று. வேர்க்கடலையில் சுருள் பூச்சியும், கம்பளிப்பூச்சியும், ஆமணக்கில் கொக்கிப் புழுவும் தோன்றி, தகுந்த தடுப்பு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. கோவை மாவட்டத்தில் கோயமுத்தூர் பகுதியைத் தவிர மற்றய இடங்களில் நல்ல மழையிருந்தது. இதனுல் பருத்து, சோளம். வேர்க்கடலை முதலிய நல்ல பயனடைந்தன. A. D. T. 27 நெல் நடவு ஈரோடு தாராபுரம் முதலிய பகுதிகளில் முடிவாயிற்று. மானவாரி வேற்கடலை, கம்பு முதலிய பயிர்களும் விதைக்கப்பட்டன. தத்துப்பூச்சி, திரிப்ஸ், துளைப்பான் முதலிய பூச்சிகள் சிறிது நெல்லில் காணப்பட்டன. வேற்கடலையில் சிறிது சுருள்பூச்சியும் ஏற்பட்டது. தகுந்த மருந்துகள் அடித்து இவை உடனடியாகத் தவிர்க்கப்பட்டன. திருச்சி மாவட்டத்திலும் நல்ல மழையிருந்தமையால் (A. D. T.27) நெல் நடவு முதலிய காரியங்கள் செவ்வனே நடந்தன.

தெற்கே அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி மாவட்டம் தவிர மற்ற மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் சுமாரான மழையிருந்தது. அதனுல் வானமபார்த்த பூமிகள் உழப்பட்டு பருத்தி, சோளம், கம்பு, சாமை முதலிய பயிர்கள் விதைப்புக்கு தயார் செய்யப்பட்டன. ஏற்கெனவே பூமியில் உள்ள வேர் கடலை, நெல், மிளகாய், கரும்பு, பருத்தி முதலியன இம்மழையின் காரணமாக நலனுற்றன. M. C. U. 2 பருத்தியில் காய்த்துளைப்பானும், நவாப்பூச்சியும் தோன்றின. P. R. S. 72 ரஷியப்பருத்தியில் சிறிது மாப்பூச்சியும். பேனும், கம்பில் திரிப்ஸ், வண்டுகள், பூஞ்சள நோய் முதலியனவும் கண்டு தடுப்பு முறைகள் கையாளப்பட்டன. கன்னியாகுமரி மாவட்டத்தில் மழை போதாததால் பழ மரங்களுக்கு பாசனம் கொடுக்க வேண்டியிருந்தது.

நீலகிரி மாவட்டத்தில் சராசரிக்குக் குறைந்த மழையே இருந்தது. இருந்தபோதிலும் பெய்த மழை பூந்தோட்டங்களுக்குப் பலனளித்தது. இம்மழையால் கிடைத்த ஈரத்தைக் கொண்டு முன்பட்ட உருளைக்கிழங்கு விதைப்புக்கும் இம்மழை சிறந்ததாக இருந்தது.

இம் மாதத்திய குறிப்பிடத்தக்க மழையளவுகளும், பிராந்திய மழையளவுகளும் பின்வருமாறு:—

குறிப்பிடத்தக்க மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்)

வரிசை எண்.	தேதி	இடத்தின் பெயர்	மழையளவு
1	11—8—66	ஆடுதுறை	61.0
2	21—8—66	திண்டிவனம்	71.1
3	24—8—66	சடலூர்	63.0
4	28—8—66	பட்டுக்கோட்டை	72.0
5	31—8—66	நாகப்பட்டனம்	65.0

பிராந்திய மழையளவுகள் (மில்லி மீட்டர்களில்).

வரிசை எண். (1)	பிராந்தியத்தின் பெயர். (2)	ஆகஸ்டு மாத மழையளவு. (3)	சராசரியில் இருந்து மாறுபாடு. (4)	குறிப்பு. (5)
1	வட பிராந்தியம்	143·7	+7·3	சராசரிக்குச் சற்று அதிகம்.
2	கீழ்க்கரைப் பிராந்தியம் ..	260·9	+136·3	சராசரிக்குச் மிக அதிகம்
3	மத்தியப் பிராந்தியம் ..	76·3	—18·7	சராசரிக்குக் குறைவு
4	தென் பிராந்தியம் ..	57·6	—4·1	சராசரிக்குக் குறைவு.
5	மலைப் பிராந்தியம் ..	90.4	—74·5	சராரிக்கு மிகக் குறைவு

1966-ம் ஆண்டு ஆகஸ்டு மாத காலநிலை அறிக்கை
(மழையளவு மில்லி மீட்டர்களில்).

இடத்தின் பெயர். (1)	இம்மாத மழை அளவு (2)	சராசரியில் இருந்து மாறுபாடு. (3)	ஜனவரி 1-ம் தேதி முதல் மொத்த மழையளவு. (4)
வட பிராந்தியம்—			
சென்னை (மீனம்பாக்கம்) ..	184·0	+67·5	522·0
திருர்க்குப்பம்*	101·5	—69·8	389·4
வேலூர்	163 0	+17·2	394·0
குடியாத்தம்*	126 4	+14·0	281·7
கீழ்க்கரைப் பிராந்தியம்—			
பாலூர்*	239·8	+67·5	606·3
திண்டிவனம்*	198·1	+23·1	397·8
கடலூர்	313·0	+191·1	492·8
நாகப்பட்டினம்	273·0	+195·5	409·0
ஆடுதுறை*	318·4	+236·7	523·0
பட்டுக்கோட்டை*	223·0	+104·9	448·0
மத்தியப் பிராந்தியம்—			
சேலம்	123·0	—43·9	453·0
சேலம்*	127·0	—26·8	526·9
கோயமுத்தூர்*	19·4	—12·9	211·8
கோயமுத்தூர்	13·0	—18·9	170·0
ஆளியார் நகர்*	5 3	—77·4	167·2
திருச்சிராப்பள்ளி	170 0	+67·1	454·0
தென் பிராந்தியம்—			
மதுரை	294·0	+190·4	501·0
பாம்பன்	7.0	—8·0	234·0
கோவில்பட்டி*	47·8	+13·0	235·9
பாளையங்கோட்டை ..	29.0	—12·2	158·0
அம்பாசமுத்திரம்* ..	—	—114·8	118·5
நாகர்கோயில்*	10·2	—84·1	152·4
கன்னியாகுமரி*	15·0	—37·2	142·2
மலைப்பிராந்தியம்—			
கொடைக்கானல்	106·0	+71·8	616·0
கூனூர்*	67·8	—24·1	678·7
உதகமண்டலம்*	60·5	—99·6	628·9
நஞ்சநாடு *	127·3	—108·6	697·8

குறிப்பு:—.* சென்னை விவசாய இலாக்காவின் ஆராய்ச்சிப் பண்ணைகள்.

[24-ம் பக்கத் தொடர்ச்சி]

மூலம் கிடைக்கும் வருவாயில் குறுகிய காலத்தில் அரசாங்கக் கடனை அடைப்பதுடன் அதிகமான உரமும், பொருளும் பெற்று வரும் நல்ல வாய்ப்பை அடைந்துள்ளனர்.

சாதாரணமாக உணவு, பணம் ஈட்டும் தானியப் பயிர்களில் மட்டும் பயிர் செய்யும் விவசாயிகளைவிட, உணவுத் தானியங்களையும், தீவனப் பயிர்களையும் பயிர் செய்து கொண்டு பயன்தரும் பால் மாடுகளைப் பராமரிப்பதன் மூலம் கலப்புப் பண்ணை விவசாயிக்குக் கிடைக்கக் கூடிய நிகர வருமானம் அளவு குறித்து புள்ளி விவரம் சேகரித்து வரப்படுகிறது.

திட்டத்தால் பயன்பெற்று உற்பத்தியைப் பெருக்குங்கள்

கலப்புப் பண்ணைத் திட்டம் குறிப்பாக விவசாயிகள் தங்கள் வருவாயைப் பெருக்கிக் கொள்வதற்கு ஏற்ற வாய்ப்பான திட்டம் ஆகும். சிறு கலப்புப் பண்ணைகளில் விவசாயிகள் தானியப்பயிர், தீவனப் பயிருடன் கறவை மாடுகளைப் பராமரித்து வருவதால் விவசாயி தனக்குத் தேவையான தானியம், பால், முட்டை, இறைச்சி, எல்லாவற்றையும் தன்னுடைய நிலத்தினின்றும், கால்நடைகளினின்றும் வெள்ளை, சிவப்புக் கோழிகள் வளர்ப்பதனின்றும் பெறுவார் என்பது திண்ணம். ஆகவே இம்மாதிரியான கிராமங்களில் கலப்புப் பண்ணை முறை பரவுமானால் அது பெருமளவில் பொருளாதாரத்தையும், விவசாயத்தையும் ஊக்குவித்து விவசாயிகள் உயர்நிலையடைய உதவி செய்யும்.

தென்னிந்திய சீதோஷ்ணத்துக்குத் தக்கபடி நன்கு பரீக்ஷிக்கப்பட்டு எங்களால் நேரிடையாகத் தயாரிக்கப்பட்ட பலவித உயர்ந்த ஜாதி

முட்டைகோஸ், நூல்கோல், பீட்ரூட், கேரட், காலிப்ளவர், குடமிளகாய்

உலகப் பிரசித்திப்பெற்ற சிறந்த ருசி, குறைந்த விதைக்குழி, பருத்த சதை கொண்ட பலவித கவர்ச்சிகரமான

தக்காளி

மற்றும் இதர வெளிநாட்டு காய்கறி விதைகள், எக்காலத்துக்கும் தகுதியான நோய் அணுகாத, அதிக மகசூல் தரும் மிக உயர்ந்த ஜாதி பச்சை நிற

வெண்டை

பெரிய, சதை பருத்த, ருசிகரமான அதிசய ஜாதி

கொத்தவரை

அதிக மகசூல், சிறந்த ருசி, கவர்ச்சி நிறம், வடிவம், குறைந்த விதை முதலிய பல விசேஷ குணங்கள் கொண்ட

கத்தரி ரகங்கள்

இதர பலவித முள்ளங்கி, மிளகாய், பரங்கி, பூசணி, வெள்ளரி முதலான காய்கறி, கீரை வகைகள், மா, எலுமிச்சை, கொய்யா, சபோடா போன்ற பழச் செடிகள், தென்னை ரகங்கள், பூச்சி மருந்துகள், தோட்டக் கருவிகள், ஸ்ப்ரேயர்கள், களை நாசினிகள் முதலிய எல்லாவற்றுக்கும் சிறந்த நம்பிக்கை வாய்ந்த இடம்:

ராஜா பண்ணைத் தோட்டம்

2, வைத்தியராமய்யர் தெரு (ஹிந்தி பிரசாரசபை அருகில்),
தியாகராயநகர் : : சென்னை-17.
தந்தி: **RAJSEED** போன்: **42262**

விவசாயச்செய்தி அலுவலரால் தொகுக்கப்பட்டு, தமிழ்நாடு அரசாங்க அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டு விவசாயத்துறை நெறியாளரால் வெளியிடப்பட்டது.



தமிழக கவர்னர் திரு. உஜ்ஜல் சிங் அவர்கள் சென்ற மாதம் கோயமுத்தூரில் பயணம் செய்த போது 3—9—1966 அன்று கோவை நேஷனல் சீட்ஸ் கார்ப்பரேஷன் விதைப் பண்ணையைப் பார்வையிட்டார். கோயமுத்தூருக்கு அருகே உள்ள பேரூரில் திரு. கந்தசாமிக்குச் சொந்தமான அந்த விதைப் பண்ணையில் வீரிய ஒட்டுச் சோளம் மிகச் சிறந்த முறையில் பயிர் செய்ய-படுறது. தமிழக கவர்னர் விதைப் பண்ணையாளரைப் பெரிதும் பாராட்டினுர்.

விதைப்பண்ணையாளர் திரு. கந்தசாமி, சி.எஸ்.எச். 1, சோளத்தினுல் அலங்கரிக்கப் பட்ட பூச்செண்டு ஒன்றை கவர்னரிடம் அளிப்பதைப் படத்தில் காணலாம்.

Registered No. M 4646

© தமிழ்நாடு அரசாங்கம், 1966

விமானமூலம் மருந்தடிப்பு



(விளக்கம் : பக்கம் 23)